# சமசமாஜக் கட்சிக் காரியாலயம்முன் குழப்பம்

Registered as a News Paqer in Ceylon    விலை சதம் 15    ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 127
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்    ஆனி 4    ரபி. ஆகிர் 13    வியாழக்கிழமை    [18-6-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

## பொலிஸ் தலையிட்டதில் எட்டுப்பேருக்குக் காயம்

கொழும்பு, புதன்
கொழும்பு புஞ்சிபொரளை யில் இன் வன்முறைச்கும்பல் ஒன்றின்மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

புஞ்சி பொரளையிலுள்ள லங்கா சமசமாஜக்கட்சிகாரியாலயத்தின்முன் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. காரியாலயம் முற்றாகவே சேதமுற்றுள்ளதாகத் தெரிகின்றது.

பொலிசார் காரணமின்றி தங்களைத்தாக்கியதாக சமசமாஜக்கட்சி பேச்சாளர் ஒருவர் கூறினார். இரண்டு கோஷ்டியினருக்கிடையில் நடைபெற்ற மோதல்களைத் தவிர்ப்பதற்காகவே தாங்கள் தலையிட்டதாகப் பொலிசார் கூறினர்கள்.

சி. பி. ஏ

# ஜூலை முதல் வாரத்தில் 'இரு கொத்து அரிசி' கூப்பன்கள்!

## பிரிட்டனில் இன்று தேர்தல்

லண்டன், ஜூன் 17
பிரிட்டனில் நாளை (18-ம் திகதி) பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது. ஜனநாயகத்தின் தாய் நாடு என்று கருதப்படும் பிரிட்டனில் இடம்பெறும் இப் பொதுத்தேர்தலை உலகம் முழுவதும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் தொழிற்கட்சியா கன்சர்வேடிக்கட்சியா தங்களை ஆட்சி செய்யவேண்டுமென்பதை பிரிட்டிஷ் மக்கள் நாளையதினம் முடிவு செய்வார்கள்.

## 'சிரமதானத்தின் மூலம் அதிக பலனைப் பெறலாம்'

மட்டுவில், புதன்
'எமது மக்கள் மத்தியிலே ஏற்றத்தாழ்வின்றி ஒன்றுபட்டு பரஸ்பர அன்பும் கூட்டுறவும் கொண்டு எமது கையே எமக்குத் துணை என்ற முதுமொழியை மையமாகக் கொண்டு நமது வேலைகளை முடிப்பதற்கு சிரமதானம் சிறந்ததோர் கருவியாக அமைகிறது. இப்படியான சிரமதானப் பணியை நாம் மேற்கொள்வதைத் தொடர்ந்து நாம் எதிர்பார்த்ததைவிட அதிக பலனையும் அடைய முடியும்'

இவ்வாறு சாவகச்சேரி நகரசபை, வாடி வீடு, கோர்ட் ஆகிய இடங்களை இங்கு நடைபெற்ற சுகாதாரவாரத்தையொட்டி சிரமதானமூலம் துப்புரவாக்கியபொழுது மேற்படி சிரமதான தொண்டிற்குத் தலைமைதாங்கிய சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் கூறினார்.

சாவகச்சேரி சுகாதார அதிபர் டாக்டர் திருமதி வி சுப்பிரமணியம், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், நகரசபை மின்விநியோக பகுதி அதிபர் வி. சோமசுந்தரம் உட்பட சுகாதார ஊழியர்கள், மருத்துவமாதர், மின்சார இலாகா ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

நகரசபைத் தலைவர் தொடர்ந்து கூறியதாவது:
'நமது மத்தியிலே ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒற்றுமை, கூட்டுறவு, பரஸ்பர அன்பு, ஆற்றல் வளர வேண்டுமென்றால் நாம் எமது சுற்றாடல் ஆகிய அனைவரையும் கூட்டி எமது கிராமத்திற்கோ நாட்டிற்கோ உரிய சில பணிகளை சிரமதானமூலம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். நாம் எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தையே எதிர்பார்த்திருப்பது ஏற்றதல்ல. இன்றைய நிலையிலே அது இயலக்கூடிய விஷயமுமல்ல.

இன்று நமது மத்தியிலே டாக்டர்கள், நகரசபை உறுப்பினர்கள், ஏனைய மின்சார உறுப்பினர்கள் அனைவரும்கூடி நின்று மண்வெட்டி, அலவாங்கு பிடித்து வேலை செய்வதைக் காணும்தோறும் எமது மத்தியில் இன்று உருவாகியுள்ள, ஏற்றத்தாழ்வற்ற ஒன்றுபட்ட, பரஸ்பர அன்புகொண்ட ஒரு புதிய சமுதாயத்தையே காண முடிகிறது. இந்த ஓர் ஒற்றுமையே எம்மையும் எமது நாட்டையும் உயர்த்தும்

### கொடியை எரித்தாராம்

## தோல்வியுற்ற யு. என் பி. வேட்பாளர் கைதாகிவிடுதலை

கொழும்பு, புதன்
ஹேவாஹட்ட தொகுதியில் கடந்த பொதுத் தேர்தலின் போது போட்டியிட்டுத் தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திரு. டானியல் அப்புஹாமி என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

திரு. அப்புஹாமி தலைவராக இருக்கும் தலத்து ஓயா பலநோக்குக் கூட்டுறவுப் பண்டகசாலையின் மீது பறக்கவிடப்பட்டிருந்த சிவப்பு-நீல நிற கொடிகளை எரித்ததாகவும் அதன் காரணமாகவே அவர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிகின்றது.

அப்பகுதியில் பதட்டம் நிலவுவதாகத் தகவல் கிடைத்ததின்பேரில் விசேஷ பொலிஸ் படையொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளது

(சி பி ஏ)

## பிரதமர் சிறிமாவுக்கு

### 55 வயதையடைந்த
## 15,000 ஊழியர்கள் கட்டாய ஓய்வு பெறுவர்

கொழும்பு, வியாழன்
55 வயதையடைந்த அரசாங்க ஊழியர்களும் கார்ப்பரேசன் ஊழியர்களும் கட்டாய ஓய்வு பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் அமுல் செய்யப்படும்போது சுமார் 15,000 பேர்கள், ஓய்வுபெறுவார்கள் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

5 நிரந்தர காரியதரிசிகளும், 1,500 உயர் அதிகாரிகளும் இதில் அடங்கியுள்ளார்கள். 15,000 ஊழியர்களில் சுமார் 5000 ஊழியர்கள் கார்ப்பரேசனைசேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது.

பொதுநிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சு, தற்பொழுது இது பற்றிய சரியான புள்ளிவிபரங்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது. 55 வயதையடைந்த ஊழியர்கள் எத்தனைபேர் அரசாங்க சேவையிலும், கார்ப்பரேசனிலும், கடமையாற்றுகிறார்கள் என்பதை இந்த அமைச்சு தயாரித்து வருகிறது.

பொதுநிர்வாக அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. பி. மகாதேவா இது பற்றி அரசாங்கத்தின் முடிவை, சுற்றறிக்கை மூலம் தலைமை இலாகாக்களுக்குஅடுத்தவாரம்அனுப்பிவைப்பார்.

இத்திட்டம் வாலிபர்கள் வேலைவாய்ப்பு பெற சந்தர்ப்பம் அளிக்கும்எனக் கூறப்படுகிறது.

## சகலருக்கும் கிடைக்கும்

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், வியாழன்
இரண்டு கொத்து அரிசி பெறுவதற்கு பயன்படுத்தப்படும் புதிய பங்கீட்டரிசி கூப்பன்கள் யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து மிகுந்த பந்தோபஸ்துடன் யாழ்ப்பாண வட்டத்திலுள்ள சகல காரியாதிகளுக்கும் விரைவில் அனுப்பிவைக்கப் படவிருக்கிறது.

25-வது தொடர்பு இலக்கத்தைகொண்ட புதிய பங்கீட்டரி கூப்பன்கள் நேற்று பரிசீலனை செய்யப்பட்டு பார்சல்களாக கட்டப்பட்டு உத்தியோகபூர்வமான முத்திரையிடப்பட்டது. இக் கூப்பன்பார்சல்களை சகல காரியாதிகளுக்கும் அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

புதிய பங்கீட்டரிசி கூப்பாளரின் பட்டியலில் பெயா பதியப்படாதவர்களுக்கு எக்காரணம் கொண்டும் புதிய கூப்பன் வழங்கப்படமாட்டாதென்றும் கூப்பன்களை தவறவிட்டால், புதிய கூப்பன்கள் எடுப்பதில் பெரும் சிரமப்படவேண்டுமென்றும், கூப்பன்களை எல்லோரும் கவனமாக, பாதுகாப்பான இடத்தில்வைத்திருக்கவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

## 'சூடுபட்டதும் அப்பெண் சுருண்டு விழுந்து மாண்டார்'

மட்டுவில், புதன்
காலைக் கடனைக் கழிக்கப் போயிருந்தேன். துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டு ஓடி வந்தேன் அப்பொழுது முதலாம் எதிரி துப்பாக்கியை நீட்டி, இரண்டாவது முறையாக இறந்த வயோதிபப் பெண்ணை சின்னக் குட்டியை குறி வைத்துச் சுடுவதை நான் கண்டேன். சூடுபட்டதும் அப்பெண் சுருண்டு விழுந்து இறந்தார்

குடத்தனை துப்பாக்கி சூட்டு கொலை வழக்கில் சாட்சியமளித்த சின்னப்பொடி சிவகுரு என்பவர் [illegible] திரு. கே. [illegible] முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினார்.

## தூது[illegible] விடுதலை

றையோடி ஜனெரோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகளும் இதில் அடங்கியுள்ளார்கள். 15,000 ஊழியர்களில் சுமார் 5000 ஊழியர்கள் கார்ப்பரேசனைசேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது.

பொதுநிர்வாக, உள்ளுராட்சி, உள்நாட்டமைச்சு, தற்பொழுது இது பற்றிய முடிவை, சுற்றறிக்கை மூலம் தலைமை இலாகாக்களுக்குஅடுத்தவாரம்அனுப்பி வைப்பார்.

இத்திட்டம் வாலிபர்கள் வேலைவாய்ப்பு பெற சந்தர்ப்பம் அளிக்கும்எனக் கூறப்படுகிறது.

---

# பதவி இழந்த இவர்களுக்கு மீண்டும் வேலை!- பிரதமர் அறிவிப்பு

கோட்டை, புதன்

முன்னாள் அரசாங்கத்தினால் வேலைநீக்கம்செய்யப்பட்ட 44 கடற்படை வீரர்களையும் உடனடியாக வேலையில் அமர்த்துமாறு பிரதமர் திருமதி பண்டாரநாயகா இலங்கை கடற்படை ராணுவ உயர் அதிகாரி திரு. விஹன்ரர்க்கு அறிவித்துள்ளார்.

கடற்படை ராணுவ ஆணையாளர், றியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர் ஆணையின் கீழ் இவர்கள் 1966-ம் ஆண்டு டிசம்பர் 3-ந் திகதி வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள்.

பிரதமர், வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த காலத்துககுரிய முழுவேதனமும் அளிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

---

ரீட்டரி கூப்பன்கள் நேற்று பரிசிலனை செய்யப்பட்டு பார்சல்களாக கட்டப்பட்டு உத்தியோகபூர்வமான முத்திரையிடப்பட்டது. இக் கூப்பன்பார்சல்களை சகல காரியாதிகளுக்கும் அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது

புதிய பங்கீட்டரிசி கூப்பன்கள், ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் விநியோகிக்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான கூப்பன்கள் இம்முறை ஒருவருடத்திற்கான புள்ளிகள் வெட்டப்பட்டு வழங்கப்படும். நாடற்றவர்களுக்கும் இம்முறையும் வழமைபோல கூப்பன் வழங்கப்படும்.

புதிய கூப்பன்களை கவனமாக விநியோகம்செய்யும்படி சகல கிராமசேவகர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரகான குடியிருப்பா

---

# தமிழக முதல்வர் கருணநிதிக்கு அரச [illegible]வரவேற்பு

## ஸ்ரீமா அரசு அளிக்கும்?

கொழும்பு, புதன்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணநிதிக்கு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின்தலைமையிலுள்ள கூட்டரசாங்கம் ராஜாங்க வரவேற்புஅளிக்கக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

1969-ம் ஆண்டு கலாச்சார குழு ஒன்றினால் இலங்கைக்கு விஜயம் செய்யும்படி திரு.மு. கருணநிதிக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருந்த போதிலும் தேர்தல் சமயத்தில்அவர் விஜயம்செய்வதை சிங்கள தலைவர்கள் எதிர்த்திருந்த காரணத்தால் விஜயம் பின்போடப்பட்டது. திரு. கருணநிதியின் இலங்கை விஜயத்தை தேர்தல் சமயத்தில் தமிழரசு கட்சியும் இலங்கை திராவிட முன்னேற்ற கழகமும் அரசியலுக்கு பயன்படுத்துவார்கள் என சிங்களத் தலைவர்கள் அச்சமடைந்திருந்தனர்

தற்பொழுது மக்கள் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதால் எதற்கும் அஞ்சத் தேவையில்லையென்றும், திரு. கருணநிதியை இலங்கைக்கு அழைப்பதன்மூலம் கூட்டரசாங்கம் இலங்கை தமிழ்மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெறவிரும்புகிறதென்றும், அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இலங்கை இளம் நடிகர் சங்கம் ஆகஸ்ட் மாதம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தவிருக்கும் சிங்கள – தமிழ் நாடகவிழாவிற்கு தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணநிதியை அழைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் விழாவிற்கு பிரதமர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவையும் கொழும்பில் நடக்கும் நாடக விழாவிற்கு திருமதி. மு. கருணநிதியையும். தலைமை தாங்க அழைக்க முடிவுசெய்திருப்பதாக சங்க செயலாளர் திரு. எம். திருச்செல்வம் தெரிவித்தார். சி பி ஏ)

---

# சித்திரத் தேர்த்திருவிழா

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகராலய சித்திரத் தேர்த்திருவிழா இன்று (18-6-70) காலை நிகழும் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் விநாயகப்பெருமான் 11-00 மணிக்கு ஆரோஹணம் செய்வார். விசேஷ பூசைகளும் மேளக் கச்சேரிகளும் நடைபெறும். 2121

---

வெடிச் சத்தம் கேட்டு ஓடி வந்தேன். [illegible]ப்பொழுது முதலாம் எதிரி துப்பாக்கியை நீட்டி, இரண்டாவது முறையாக இறந்த வயோதிபப்

---

# தூது[illegible] விடுதலை

றையோடி ஜனெரோ, ஜுன் 17

பிரேஸிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜெர்மனித் தூதுவர் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. அவருக்கு எதுவித தீங்கும் விளைவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி 3-ம் பக்கம்)

---

# புதிய தலைவர்

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு பட்டின சபையின் புதிய தலைவராக ஞெக் சூசைப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். முன்னாள் தலைவர் திரு. செல்வரத்தினத்தின் பதவி காலியானதைத் தொடர்ந்தே புதிய தலைவர் தெரிவுநடைபெற்றது.

---

# பல். கழக மாணவர் பேரணி

கொழும்பு, புதன்

சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த மாணவர்களின் பேரணியொன்று நாளை (வியாழன்) கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. இக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்மதுவும் சொற்பொழிவாற்றுவார்.

---

# இரத்தினபுரி தேர்தல் ஆட்சேப மனு தாக்கல்

கொழும்பு, புதன்

இரத்தினபுரி தொகுதியில் ஆட்சிமன்றத்திற்குத்தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. நந்தா எல்லாவலையின் தெரிவை ஆட்சேபித்து கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் இரத்தினபுரியை சேர்ந்த திரு. பி. பி. விஜயசுந்தரா என்பவரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது

திரு. எல்லாவலை ஜெயில் தண்டனை அனுபவித்தவர் என்பதால் தேர்தலில் போட்டியிட அவர் தகுதி பெற்றிருக்கவில்லையென்று மனுதார் தமது ஆட்சேபத்தில் தெரிவித்திருக்கிறார்

1966-ம் ஆண்டில் பெப்ரவரி மாதம் பலாத்கார வழக்கொன்றில் திரு எல்லாவலை மீது சுமத்தப்பட்ட எட்டுக் குற்றங்களில் ஆறில் குற்றவாளியாகக் காணப்பட்டு இரத்தினபுரி மாஜிஸ்திரேட் ஆறு குற்றங்களுக்கும் தலா மூன்று மாதச் சிறைத் தண்டனையை ஒரே சமயத்தில் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்திருந்ததாக மனுதார் தெரிவித்திருக்கிறார்.

இத்தீர்ப்பை சுப்ரீம்கோர்ட்டும் ஊர்ஜிதம் செய்ததாகவும் வேட்பாளர் மனுத்தாக்கல் தினத்தில் தேர்தல் அதிகாரி இந்த ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ள அதிகாரம் இல்லையென்று தெரிவித்தார் எனவும் மனுதார் தெரிவித்திருக்கிறார்

(சி பி ஏ)

---

பட்டதும் அப்பெண் சுருண்டு விழுந்து இறந்தார்

குடத்தனை துப்பாக்கி சூட்டு கொலை வழக்கில் சாட்சியமளித்த சின்னப்பொடி சிவகுரு என்பவர் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த நாகன் சின்னப்பன், வல்லி ஆறுமுகம், தம்பன் செல்லத்தம்பி, தம்பன் செல்லக்கிளி, கணேசன் கனகன், சங்கரன் தளையசிங்கம் ஆகிய ஆறு பேரும், குடத்தனையைச் சேர்ந்த சின்னக்குட்டி என்ற 50 வயது வயோதிப மாதை கடந்த பெப்ரவரி மாதம் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது இந்த வழக்கை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

விசாரணையின் போது முதலாம், இரண்டாம், மூன்றும் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பி அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜராகியிருந்தார். ஏனைய நான்காம், ஐந்தாம், ஆறும் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி. செல்லத்தம்பி ஆஜராகியிருந்தார். விசாரணையின் போது தொடர்ந்து சாட்சியமளித்த சின்னத்தம்பி கூறியதாவது:

"சம்பவதினம் நான் சம்பவம் நடைபெற்றதற்கு அடுத்த கந்தன் வீட்டில் வெங்காயம் துப்பரவாக்கிக் கொண்டிருந்தேன், பின் நானும் கணபதிப்பிள்ளையும் ரோட்டால் வரும்போது இந்த எதிரிகளில் சிலர் என்னைக் கையாலும் கொட்டனாலும் தாக்கினார்கள். அப்பொழுது இரண்டாம் எதிரி துப்பாக்கியை உயர்த்தி வானத்தை நோக்கிச் சுட்டார். அப்பொழுது இறந்தவரான சின்னக் குட்டி வீட்டு ஒழுங்கையிலும் துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டது. அப்பொழுது முதலாம் எதிரி நாகன்சின்னப்பன் துப்பாக்கியுடன் ஒழுங்கையால் ஓடிவந்து ரோட்டால் ஓடினார் என்றார்.

அடுத்து சின்னப்பொடி சிவகுரு சாட்சியமளிக்கையில், 'நான் காலைக் கடன்களை முடித்துக் கொண்டிருக்கையில் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. உடனே அத்திசையை நோக்கி ஓடிப் போனேன். முதலாம் எதிரி துப்பாக்கியை இரண்டாவது தடவையாக நீட்டி, இறந்தவருக்கு குறிவைத்துச் சுட்டார். இறந்தவர் கீழே விழுவதை நான் நேரில் கண்டேன்' என்றார்.

---

கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

திரு. அப்புஹாமி தலைவராக இருக்கும் தலத்துஓயா பல நோக்குக் கூட்டுற

நிலவுவதாகத் தகவல் கிடைத்ததின்பேரில் விசேஷ பொலிஸ் படையொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளது (சி பி ஏ)

---

# பிரதமர் சிறிமாவுக்கு பொதுவரவேற்பு

## யாழ்.மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வரும்போது அவருக்கு யாழ். மாநகரசபை சிறந்த முறையில் பொது வரவேற்பொன்றை அளிப்பதென நேற்றுக்கூடிய யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு தலைவர் திரு. ரீ. எஸ். துரைராஜா தலைமை வகித்தார்.

பிரதமர் சிறிமாவுக்கு யாழ். மாநகரசபை ஒரு பொது வரவேற்பளிக்க வேண்டுமென ஜனாப் எம் ஏ எஸ் காதா (மா உ) கொண்டுவந்த பிரேரணைக்கு முன்னாள் மேயர் நாகராஜா ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். இதன் பிரகாரம் மேற்படி தீர்மானம் 10 அங்கத்தவர்களின் வாக்கால் நிறைவேறியது

திரு. எம். சி. சுப்பிரமணியம் நியமன எம். பி.க்கும் பொது வரவேற்பளிப்பதென்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது (கு வி ம)

---

1966-ம் ஆண்டு புரட்சி சதி

# பொலிசார் நடத்திய விசாரணைபற்றி ஆராயப்படும்

கொழும்பு, புதன்

1966-ம் ஆண்டு புரட்சிச் சதி பற்றி பொலிசார் நடாத்திய விசாரணைகள் பற்றி ஆராயப்படும் என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

1966-ம் ஆண்டுசதி பற்றி நீதிமன்ற விசாரணை நடைபெற்ற பின்னர் எல்லா சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட்டதுதெரிந்ததே

இச்சதியில் சப்பந்தப்பட்டவர்கள் எனச்சந்தேகத்தின்பேரில் விளக்கமறியலில் வைத்திருந்தவர்களில் தொம்பே முதலாளி என அழைக்கப்பட்டவரும், இராணுவத்தைச் சேர்ந்த திலகவர்த்தன என்பவரும் மரணமடைந்தது பற்றி புனர்விசாரணை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விசாணைகளில் பொலிஸ் நடந்து கொண்ட விதம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை ஆகியனபற்றி நடைபெற விருக்கும் விசாரணையில் ஆராயப்பட உள்ளது.

---

# துறைமுகத்துக்கு தனி அதிகார சபை

கோட்டை, புதன்

துறைமுகக் கூட்டுத்தாபனம், துறைக்கொமிஷன் இரண்டையும்ஒன்றாக இணைத்து இரண்டுக்கும் தனி அதிகாரச்சபையொன்றை நிறுவுவதற்கு கப்பல் தொழில் அமைச்சர் திரு. பிபி.ஜி. கலுகல்ல முடிவு செய்திருக்கிறார்.

துறைமுகத்தில் வேலைகளைத்துரிதப்படுத்தவும், அபிவிருத்திசெய்யவும் தொழிலாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவையென்று திரு.கலுகல்ல கேட்டுக்கொண்டிருக்கிறார்.

துறைமுகத் தொழிலாளர்களின் கூட்டமொன்றில் திரு. கலுகல்ல பேசினார் அவர்களின் ஒத்துழைப்பு தமக்கு மிகவும் தேவைப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார். தொழிலாளர்களின் பிரச்னைகளை ஒத்துழைப்புமூலமும் பேச்சுவார்த்தைகள்மூலமுமே தீர்க்கப்படவேண்டும் என்றும் மந்திரி அவர்களிடம் தெரிவித்தார். துறைமுக அபிவிருத்திக்காகத் தங்களின் பூரண ஒத்துழைப்பைத் தருவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

---

காணும்தோறும் எமது மதியில் இன்று உருவாகியுள்ள, ஏற்றத்தாழ்வற்ற ஒன்றுபட்ட, பரஸ்பர அன்புகொண்ட ஒரு புதிய சமுதாயத்தையே காண முடிகிறது. இந்த ஓர் ஒற்றுமையே எம்மையும் எமது நாட்டையும் உயர்த்தும் ஏணியாக அமையும் என்று நான் கூறினால் அது ஒரு போதும் மிகையாகாது' என்றார்.

---

# தேரோவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, புதன்

எறிகுண்டு வைத்திருந்த குற்றத்தின் மீது கைதுசெய்யப்பட்ட வண. தேவமொட்டாவ அமரவன்ச தேரோவை மேலும்இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

---

# தியேட்டர்களுக்கு எசசரிக்கை

கொழும்பு, புதன்

மாணவ மாணவியர்களுக்கு கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள சினிமா தியேட்டர்களில் பகல்காட்சிகளுக்கு டிக்கெட்டுகள் வழங்கப்படமாட்டாது என்றும், சட்டத்தை மீறி வழங்கினை சினிமா தியேட்டர்களின் 'லைசென்ஸ்கள் ரத்துச்செய்யப்படும் என்றும் கொழும்புமா நகர சபை, தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளது.

---

# சலு சல தலைவா ஒரு வருடத்திற்கு சம்பளம் பெறுர்

கொழும்பு, புதன்

''லங்கா சலுசல'' வின் புதிய தலைவர் திரு. டோக்ளஸ் பெரேரா ஒருவருடத்துக்கு சம்பளம் வாங்குவதில்லையென்று முடிவு செய்திருக்கிறார். தமது சம்பளத்தையும் இதர நிர்வாகிகளின் சம்பளங்களையும் குறைப்பதென்றும் அவர் முடிவு செய்திருக்கிறார். முந்திய டைரக்டர்கள் பெருமளவில் சம்பளம் பெற்றதாகவும், தலைவர் மாத்திரம் மூவாயிரம்ரூபாய் சம்பளமும் 15 வீத சேமலாபநிதியும் பெற்றுவந்ததாகவும் திரு பெரேரா பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். சி.பி, ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

துவக்கு:

நல்ல நிலையிலுள்ள 12 அல்லது 16 போர் (Bore) ஒற்றைக்குழாய் துவக்கு லைசென்ஸ் உள்ளவர்களிடமிருந்து தேவை. விபரங்களுக்கு: 17, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 2149

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் சில தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆர்வமுள்ள பெண்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஒரு கிராமத்துக்கு ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். (விண்ணப்ப முடிவு 30-6-70) FLOATERS, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2156

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலின் பூந்தோட்டம் பார்ப்பதற்கும், தோட்ட வேலை செய்வதற்கும் சைக்கிள் வைத்திருக்கும் ஆள் தேவை. நேரில் மனேச்சரை சந்திக்கவும். 2158

### வகுப்புகள்

ஜி. சி. ஈ. (சாதாரணம், உயர்தரம்) வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கத் தகுதி தராதரமுடைய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும். அதிபர், கல்வி நிலையம், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2148

சிறுப்பர் பரீட்சை வகுப்புகளுக்குப் பிரவேசங்கள் தற்போதிலிருந்தே ஏற்கப்படுகின்றன. எங்கள் பொதுப் பரீட்சை களது பெறுபேறுகள் எப்பொழுதும் நன்றாகவேயுள்ளன. யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 2146

### காணவில்லை

பருத்தித்துறைப் பஸ் நிலையத்தில் பின் வரும் பெயர்களையுடைய ஏழு கூப்பன்கள் காணமல் போய் விட்டன. கூப்பனில் காணப்படும் பெயர்கள்:- வே. கந்தசாமி, க. சரவணமுத்து, க. தங்கம்மா, க. கருணகுலநாதன், க. தனகுலவதி, க. கருணகுலவதி. க. இரத்தினவதி. கண்டெடுத்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வே. கந்தசாமி, கல்லுவம், கரவெட்டி. 2154

## விளம்பரம்

### கட்டைவேலி கிராமசபை

கீழ்க்காணும் வேலைக்கு 1970-ம் ஆண்டு ஆடி மாசம் ஐந்தாந்திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30 மணி வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன கேள்விப்பத்திரங்கள் ஆடி மாசம் 4-ம் திகதி பகல் 12 மணிவரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் கந்தோரிலறிந்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்

கொட்டையடி ஒழுங்கைத் திருத்தம்.

பொ. சபாபதிப்பிள்ளை
காரியதரிசி
நிர்வாகஸ்தருக்காக.

கட்டைவேலி கி. ச.
கந்தோர், அல்வாய்.
16-6-70. 2123

### ஏல விற்பனவு

"வசந்தம்" மானிப்பாய் திரு வி. கே. இராசலிங்கம் அவர்களிடம் 1-4-69 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 4-7-70 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அதேயிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
வண்ணார்பண்ணை.
2311

### விற்பனைக்கு

காணி:

வட்டுக்கிழக்கு இந்துக் கல்லூரிக்கருகில் 25000/- ரூபா பெறுமதியான 2 பரப்புக் காணியும் கல்வீடும் விற்பனைக்குண்டு. சிறந்த குடியிருப்புப் பகுதி. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2151, மே/பா 'ஈழநாடு', த. பெ. இல.49, யாழ்ப்பாணம். 2151

### விளையாட்டுப் போட்டி

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வருகிற மாதம் 2ம் திகதி நடைபெறவிருக்கிறது.

தீவுப்பகுதி எம். பி, பண்டிதர் கா, பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முன்னாள் அதிபர் திரு. சச்சிதானந்தம் கொடியை ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்துவைப்பார்.

ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி
தினசரி 3 காட்சிகள் நடிக்க

### ஹாக்கி போட்டி

# சென்ஜோன்ஸ்வெற்றி!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண பாடசாலை ஹாக்கி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில், யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் ஹாக்கிச் சுற்றுப் போட்டியின், 'ஏ' பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியை வெற்றி பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை சென். ஜோன்ஸ் கல்லூரி மிகவும் சிறப்பாக விளையாடியது. இக்கோஷ்டி இடைவேளையின் போது 3-0 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின்னும், சென். ஜோன்ஸ் கல்லூரி மேலும் 3 கோல்களைப் போட்டு, ஆட்டமுடிவில் 6—0 கோல்களால் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியைத் தோற்கடித்தது. சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னணி வீரர் வி அன்பரசு மிகசாதூரியமாக விளையாடி அடுத்தடுத்து ஐந்து கோல்களைப் போட்டு ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

இப்போட்டிக்கு திரு. வி. ரி. கணேசலிங்கமும், திரு. சி. நடேசனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

இந்தச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவில் அருணோதயாவிடம் சிதம்பரா தோல்வி அடைந்தது, என நேற்று வெளியானது தவறு அருணோதயாவிடம் யாழ். மத்திய கல்லூரியே தோல்வியடைந்தது. (தே. நி)

## "தொழிலாளர் பிரச்னையை இந்த அரசுதான் தீர்க்கப் போகிறது"

உடுப்பிட்டி, புதன்

"கூட்டரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம்தான் சிறுபான்மைத் தமிழர்கள் நன்மைகளைப் பெறமுடியும். விவசாயிகள், சாதாரணத் தொழிலாளர்களின் பிரச்னைகளை இந்த அரசாங்கத்தினாலேயே தீர்க்கமுடியும் என்பது உண்மை"

மேற்கண்டவாறு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயலாளர் திரு. சி. செல்லையா துன்னாலை தெற்கு தயாநிதி கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையவிசேட பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'தேசிய சிறுபன்மை இன, மொழி, கலை, கலாச்சாரம் முதலிய உரிமைகள் கூட்டணி அரசாங்கத்தில் பேணிப் பாதுகாக்கப்படும். இதற்கு முன்னோடியாக மந்திரி சபையில் சகல இன, மத மொழிபேசும் அங்கத்தவர்கள் உள்ளடங்கியிருப்பது நம்பிக்கை ஊட்டுகின்றது.

இதே நேரத்தில் அவர்கள் சாதி சமய வேறுபாடு இல்லாத சமூக அமைப்பை உருவாக்கும் நோக்குடன் எந்த அரசாங்கமும் செய்ய முன்வராத சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதித்துவம் வழங்கும்முயற்சியைககூட்டணியரசாங்கம் திரு: எம். ஸி சுப்பிரமணியத்தை நியமன எம். பியாகத் தெரிவு செய்ததின் மூலம் சாதனை புரிந்துள்ளது.

இக்கூட்டம் திரு: தவபாக்கியம் தலைமையில் நடைபெற்றது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

### திருப்பணிச்சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், வியா.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை இவ்வாண்டு உத்தியோகஸ்தர்கள்:- தலைவர் திரு. ச. சோமசுந்தரம், உப-தலைவர்கள்:- சீமாட்டி பு. வைத்தியநாதன், டாக்டர் எஸ். அரியரத்தினம், திரு. சு. சிவசுப்பிரமணியம், கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு. இராசநாயகம், திரு. ச. ஆறுமுகம், திரு. ரீ. முரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடபகுதி பாடசாலை மாணவர்களின்

# நவீன விஞ்ஞான உலகம்!

[கடந்த பதினைந்தாம் பதினாறும் பதினேழாம் திகதிகளில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மண்டபங்களில் நடைபெற்ற வடமாநிலப் பாடசாலைகளின் விஞ்ஞானக் கண்காட்சி பற்றி நமது உடுப்பிட்டி நிருபர் ஜே. ஜெயக்குமார் இங்கு எழுதுகிறார்]

விஞ்ஞானம் வெளிநாட்டவர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. எம் நாட்டவர்களாலும் விஞ்ஞானத்தின் சகல நுட்பங்களையும் கையாளமுடியும் என்பதை நிரூபிக்கும்' நவீன விஞ்ஞான உலகம்' ஒன்றைக் கடந்த 15-ந் திகதி முதல் 17-ம் திகதி வரை கண்டுகளிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

அமெரிக்காவில் வால்ட் டிஸ்னியின் அற்புத உலகத்தை அகக் கண்ணால் கண்டு மகிழ்ந்தவர்கள் இங்கே விஞ்ஞானத்தின் ஒவ்வொரு அம்சமும் அப்படி அப்படியே பளிச்சிடும் புதுமை உலகை நிஜக்கண்ணால் கண்டு வியப்படைந்தனர்.

வடமாநிலப் பாடசாலைகள் விஞ்ஞான வெளிக்கள வேலை நிறுவனம் நடாத்திய விஞ்ஞானக் கண்காட்சியின் சிறப்பையே மேற்கண்டவாறு குறிப்பிட்டேன், இவ் விஞ்ஞானக் கண்காட்சி நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மண்டபங்களில் நடாத்தப்பட்டது.

### 23 பாடசாலைகள்

தொண்டமானாற்றில் பாடசாலைகள் விஞ்ஞான வெளிக்கள வேலை ஆய்வு கூடம் அமைப்பதற்காக நிதி திரட்டும்முகமாக இக் கண்காட்சி நடாத்தப்பட்டது. இக் கண்காட்சியில் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், நாவற்குளி மகாவித்தியாலயம், சாகச்சேரி மகளிர் வித்தியாலயம், சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, [illegible]த்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, புலோலி ஆண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, வல்வெட்[illegible]த்துறை சிதம்பராக் க[illegible]லூரி, தொண்டமனாறு மகாவித்தி

பொது விஞ்ஞானப்பகுதியில் 71 பொருட்களும், இரசாயனம் சம்பந்தமாக 46 பொருட்களும் விவசாயம் பற்றி 3 பொருட்களும், ஒளிப்பதிவுப் படவியலில் 4 வகைப்பிரிவுகளும் புவியியலில் 10 பொருட்களும், வரைபடங்களும், மாதிரிகளும், பௌதிகவியலில் 40 பொருட்களும், உயிரியலில் 44 பொருட்களும் வேறுஅம்சங்களுமாகச் சுமார் 400 காட்சிகள் இடம்பெற்றன.

இக் கண்காட்சியின் உண்மையான நோக்கம் பற்றி அறியும் ஆவலுடன் அங்கே இருந்த அலுவலக அறைக்குச் சென்றேன் "வடபகுதியில் விஞ்ஞானம் துரிதமுன்னேற்றம் அடைந்து வருகின்றது. எம்மிடம் போதிய பொருளாதாரம் இல்லாவிட்டாலும் வளரும் விஞ்ஞான ஆர்வத்தைக் கட்டுப்படுத்தி விடமுயாது" என்று வடபகுதிவிஞ்ஞான வெளிக்கள நிறுவனக் காரியதரிசி திரு. கே. பொன்னம்பலம் என்னிடம் பெருமையுடன் கூறினார்.

### முன்னோடி நிறுவனம்

கிழக்காசியாவிலேயே இது ஓர் முன்னோடியான முதல் நிறுவனம் என்றும் அவர் குறிப்பிட்டார்,

வடபகுதி விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதன் தற்போதைய பாடத்திற்கு அமையவே கண்காட்சியில் காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டினார்.

கண்காட்சியின் முதல்மண்டபத்தில் நுழைந்ததும் "நாகர் கோவில்" எம்மை வரவேற்கிறது. வடமராட்சியின் கிழக்கு நாடு எனப்படும் நாகர் கோவில் சூழ்நிலையை அங்கே சிருஷ்டித்திருந்தனர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர உயிரியல் மாணவர்கள்.

### கம்யூட்டர்

புலோலி ஆங்கில ஆண்கள் பாடசாலை மாணவர்கள் 'கம்யூட்டர்' இயந்திரம் பொம்மைகளை ஜோடி சேர்த்து விளையாடும் வினோதத்தைக் காணமுடிந்தது. இக் கம்யூட்டருடன் பார்வையாளர்களும் விளையாடுகின்றனர் இவ்விளையாட்டில் யார் கையில் சிவப்பு பொம்மை சிக்குகிறதோ அவர் அதிர்ஷ்டசாலியாகிறார்.

இதே பாடசாலையினரின் வைத்திருந்தது

வல்வை சிதம்பராக் கல்லூரியின் 'எஸ், பீ, ஆகியவற்றின் சக்தி நிலைகள்' விளக்கமும் தீவிபத்து அறிவிப்புக கருவியின் நல்ல முயற்சிகள்.

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியின் கண்ணின் விம்பம் விழுதல் எவ்வாறு நடைபெறுகின்றதென்ற விளக்கக் காட்சியும், காதின் இயக்க அமைப்பும் அவசியம் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

### மகாவலி

தற்போது நாட்டில் பிரச்னையை ஏற்படுத்தியுள்ள மகாவலிகங்கை திசை திருப்பும் திட்டத்தில் கைவைத்துள்ளனர். தேவரையாளி இந்துக்கல்லூரியினர். இவர்கள் களிமண்ணின் உதவியுடன் அமைக்கப்பட்ட மாதிரி அமைப்பில் ஹட்டனிலிருந்து தொடங்கி கிழக்கு வவனியா வரைமட்டும் கங்கையைக் கொண்டு வந்துள்ளனர்.

மட்டுவில் மகாவித்தியாலய யாழ். தீபகற்ப மண்வகைகள், சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரியினரின் சுண்ணக் கற்பிரதேச மாதிரி அமைப்பு முதலியனவற்றிற்கு ஒரு 'சபாஷ்'. முகக்கியமாக நிலாவரைப் படிவ அமைப்பை இக்காட்சி விளக்குகின்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியினரின் மீன்வகைகள், அதிசயசினிமா, இரசாயனக் காட்சிகள், மின்நிலையம் ஆதியனஅறிவுக்கு விருந்தளிப்பனவாக இருந்தன.

கண்காட்சியைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது பக்கத்து அறையிலிருந்து சேவல் கூவும் சத்தம் பலதடவை கேட்டது. அந்த அறையை எட்டிப் பார்த்த பொழுது ஒரு கோழிப்பண்ணையே அங்கு காணமுடிந்தது. நெல்லியடி ம. ம. வித்தியாலய முயற்சி இது.

வரணி மகாவித்தியாலயம் எலுமிச்சம் பழத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்று 'பல்பை' எரித்துக் காட்டியது. மற்றும் பாடசாலைகளின் காட்சிகளும் கரணவாய் மகாவித்தியாலயத்தின் இயந்திர மூளையும் பாராட்டத்தக்கனவாக இருந்தன.

வடபகுதியில் விஞ்ஞானிகள் பலர் நிச்சயம் தோன்றத்தான் போகிறார்கள் என்பதனை இந்தப் பொருட்காட்சி சொல்லாமல் சொல்

### பத்திரிகையாளர் பயிற்சி

கொனாக்றி, ஜுன் 17

கினியாவைச் சேர்ந்த 60 பத்திரிகையாளர்கள் கொனாக்றியில் 3 மாதங்களாக நடைபெற்ற பத்திரிகைத் தொழில் பயிற்சி வகுப்பில் பங்கு பற்றினர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பத்திரிகையாளர் சங்கத்தின் உதவியுடன் இந்த வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

### 5 பிள்ளைகளின் தாய் தற்கொலை

யாழ்ப்பாணம், வியாழன்

ஐந்து பிள்ளைகளின்தாய் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஓமந்தையில் நடந்துள்ளது

ஓமந்தையை சேர்ந்த தா. நாகம்மா என்ற 39 வயதுபெண்ணின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

காலஞ்சென்றவர் ஓமந்தையில் கடைவைத்து வியாபாரம் செய்துவந்தாரென்றும், சிறுகுடும்பத்தொல்லைகள் இருந்ததாகவும் மரண விசாரணையில் கூறப்பட்டது. (கு. வி. ம.)

### தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

எல்லா இனத்தவரையும் மதத்தவரையும் உள்ளடக்கி மந்திரிசபை அமைத்ததோடு சிறுபான்மைத்தமிழர் ஒருவருக்கு நியமன எம் பி. பதவி வழங்கிதான் ஒரு உண்மையான சோஷலிச வாதிதான் என்பதை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ உணர்த்திவிட்டார் என்றும் இதனைப் பாராட்டி பிரதமருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதென்றும் சுண்டிக்குளி ஐக்கிய சோஷலிச வாலிபர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக் கூட்டத்திற்கு மானிப்பாய் கிராமசபை உறுப்பினர் சி. இராசா தலைமை வகித்தார்.

வடமராட்சியில்

### எம். ஸி. க்கு கார் அன்பளிக்க நடவடிக்கை

உடுப்பிட்டி, செவ்வாய்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் புதிய நியமன எம். பி. யுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தைப் பாராட்டி வர

நினைவிற் கண்டெடுத்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
வே. கந்தசாமி, கல்லுவம், கரவெட்டி. 2154

பர் திரு. சச்சிதானந்தம் கொடியை ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்துவைப்பார்.


**ராணி** (யாழ்ப்பாணம்)

ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா
நாகேஷ்—வி.கே. ராமசாமி
தினசரி 3 காட்சிகள் நடித்த

**பெண்ணை வாழ விடுங்கள்**



ரசிகப் பெருமக்கள் குடும்பத்துடன் சென்றுபார்க்க வேண்டிய ஒரு தமிழ்த்திரை விருந்து

**யாழ். வின்ஸர் வெண் திரையில்**

இப்பொழுது திரையிடப்படுகிறது

**ஜெய்சங்கர்—தேவிகா**

நாகேஷ், சச்சு, மனோகர் நடித்த

**தெய்வீக உறவு**

(தினசரி 4 காட்சிகள்)



இப்பொழுது திரையிடப்படுகிறது

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

**எம்.ஜி.ஆர். ஜெயலலிதா**
**நாகேஷ் ரெங்கராவ்**

மற்றும் பலர் நடிந்த





344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அன்ட் 61 மீ.

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப் பயிற்சி, 6-15 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை.


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரி-போயா, போயா 4 காட்சிகள்
ஜெமினி — சாவித்திரி
நடித்த
**மனிதன் மாறவில்லை**



**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பறக்கும்பாவை**
[ஈஸ்ட்மன் கலர்]



**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
நாகேஷ் - ராஜ்ச்ஸ்ரீ
நடித்த
**அனுபவிராஜா அனுபவி**



**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7&9-45 p.m
Poya-Pre Poya 10.30 a.m.
Sandy Dennis, Keiro Dullea
in
THE FOX
Symbol of the male
(Adults only-color)
கட்டாயமாக
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்



**REGAL** JAFFNA
Daily 4 Shows
Jim Brown
Raquel Welch
in
100 RIFLES
(Adults only)


...ண்டு உத்தியோகஸ்தர்கள்:- தலைவர் திரு. ச. சோமசுந்தரம், உப-தலைவர்கள்:- சிமாட்டி பு. வைத்தியநாதன், டாக்டர் எஸ். அரியரத்தினம், திரு. சு. சிவசுப்பிரமணியம், திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு. இராசநாயகம், திரு. ச. ஆறுமுகம், திரு. ரீ. முருகேச பிள்ளை, திரு. வி. க. கந்தசாமி, திரு. கே. சி. தங்கராசா,

கூட்டுத் தனாதிகாரிகள்:- திரு. மு. வயிரவப்பிள்ளை, திரு ராம். பழனியப்ப செட்டியார் திரு. சீ. ஞானப்பிரகாசம், காரியதரிசி:- திரு. வீ. அலரிராசா, உப-காரியதரிசிகள்:- திரு. ஆ. கந்தையா, திரு. சி. கதிரவேலு. திரு. த. சிவராமலிங்கம், திரு. வி. கந்தசாமி

— —

## எம். பிக்களுக்கு வரவேற்பு

மஸ்கெலியா. புதன்

மஸ்கெலியா நகர பொது மக்களால் நியமன எம் பியும் ஐ. தொ. க. தலைவருமான ஜனாப் ஏ. அஸீஸுக்கும் மஸ்கேலியாத் தொகுதி எம். பி. திரு காமினி ஆரியதிலக்காவுக்கும் பிரமாண்டமான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது.

அவ் வைபவத்தின்போது ஜனாப் ஏ. அஸிஸ் இத்தேர்தலினால் நாட்டில் இரு பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன விவசாயி தொழிலாளி தலைநிமிர்ந்து வாழ வழிவகுத்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

யாலம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, நந்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, புலோலி ஆண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, தொண்டமனாறு மகாவித்தியாலயம், கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம், வதிரி திரு இருதயக்கல்லூரி, புற்றளை மகாவித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, பளை மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கரணவாய் மகா வித்தியாலயம் முதலிய வட பகுதியைச் சேர்ந்த 23 பாடசாலைகள் பங்குபற்றின.

இப்பொருட்காட்சியில் ...த்து விளையாடும் விநோதத்தைக் காணமுடிந்தது. இக் கம்யூட்டருடன் பார்வையாளர்களும் விளையாடுகின்றன இவ்விளையாட்டில் யார் கையில் சிவப்பு பொம்மை சிக்குகிறதோ அவர் அதிர்ஷ்டசாலியாகிறார்.

இதே பாடசாலையினரின் 'பேபி கம்யூட்டர்' எண்களில் கூட்டல், கழித்தலைச் செய்து காட்டி மனித மூளையின் 'மவு'சைக் குறைக்கப் பார்க்கின்றது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிமாணவிகளின் மாயப் பூவைப் பார்த்துப் பார்த்து அனைவருக்கும் முதுகு வலியெடுத்து விட்டது. புலோலி ஆண்கள் பாடசாலை அதிசய ரோசாவும் இதுபோன்றதே.

இலங்கைத் தேர்தல் தொகுதி வரைபடம் சகல ஆட்சிமன்றஉறுப்பினர்களின் புகைப்படங்களுடன் பிரம்மாண்டமான வரைபடம் மூலம் நெல்லியடி ம. ம. வித்தியாலயம் பார்வைக்கு ...

கரணவாய் மகாவித்தியாலயத்தின் இயந்திர மூளையும் பாராட்டத்தக்கனவாக இருந்தன.

வடபகுதியில் விஞ்ஞானிகள் பலர் நிச்சயம் தோன்றத்தான் போகிறார்கள் என்பதனை இந்தப் பொருட்காட்சி சொல்லாமல் சொல்லியது.

— —

## நான்காவது முனசிங்காவுக்கு உயர் பதவி

கொழும்பு. செவ்வாய்

இலங்கை ஹோட்டல்கார்பரேஷன் தலைவராக திரு நிமால் முனசிங்க நியமிக்கப்படவிருக்கிறார் எனத் தெரிய வருகிறது

இவர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு மங்களமுனசிங்கா இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. அனில்முனசிங்கா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு சுசில் முனசிங்கா ஆகியோரின் சகோதரராவார்.

## நடவடிக்கை

உடுப்பிட்டி, செவ்வாய்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் புதிய நியமன எம். பி. யுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தைப் பாராட்டி வரவேற்பு அளிப்பதெனச் சிறுபான்மைத் தமிழர்மகாசபை வடமராட்சிக்கிளை தீர்மானித்துள்ளது.

தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரையும் அழைத்து வரவேற்பளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வரவேற்பு விழாவுக்கான ஒழுங்குகளை மகாசபையின் வடமராட்சிக் கிளையினர் துரிதமாகக் கவனித்து வருகின்றனர். அன்றைய தினம் எம். ஸி. க்குக் கார் ஒன்றை அன்பளிப்புச் செய்யவும் நிதி திரட்டிவருகின்றனர்.


**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


# 'இலக்கிய அரசியல் அறிவை இளைஞர் வளர்க்கவேண்டும்'

மட்டுவில், புதன்

'ஒருநாட்டின் முதுகெலும்பாக அமைவது அந்நாட்டின் இளைஞர் சமுதாயம்தான் என்ற உண்மையை இன்று முன்னேறிவரும் உலகநாடுகளின் சரித்திரங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. எமது மத்தியிலும் இளைஞர்கள் எமது நாட்டையும், ஏட்டையும், வீட்டையும் முன்னேற்ற பணியாற்றத் தொடங்கிவிட்டார்களென்பதை இப்போது காணக் கூடியதாகவிருக்கிறது.'

இவ்வாறு மட்டுவில் மடத்தடி கந்தர் இளைஞர் முன்னேற்றக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது தலைமைதாங்கி உரைநிகழ்திய வழக்கறிஞர் திரு. என். அருணாசலம் கூறினார்.

அவர் தமது தலைமைஉரையில் கூறியதாவது:

'எந்த ஒரு நாட்டிலும் இளைஞர் சமுதாயமே அந்த நாட்டினது இனம், மொழி, கலை, கலாசார வளர்சசிகளுக்கும், பொருளாதார, கல்வி வளர்ச்சிகளுக்கும் முன்னோடியாக நின்று உழைத்து வருகிறது என்பது இன்று உலகறிந்த உண்மை. இதன் வழியைப் பின்பற்றியே எமது மத்தியிலும் வாலிபர் சமுதாயம் தம் இன, மத, மொழி, போன்ற நாட்டின் முக்கிய அம்சங்களின் வளர்ச்சிக்காக உழைக்க முன்வந்துள்ளது போற்றத்தக்கது.

இன்றைய நிலையிலே நாம் எமது மக்கள் மத்தியிலே கலை, இலக்கிய, அரசியல் அறிவை வளர்க்க வேண்டியது மிகமிக அவசியம் ஆகிறது. இன்று நமது மத்தியிலே ஆண்களும், பெண்களும், வாலிபர் முதல் வயோதிபர்வரை சினிமாத் துறையில் உள்ள அனுபவ முதிர்ச்சி ஏனைய துறையில் இல்லை என்றே துணிந்து கூறலாம். இந்த நிலையில் நாம் எமக்கென ஒரு நூல் நிலையத்தை நிறுவ வேண்டியது அத்தியாவசியமாகிறது.'

மற்றும் பலரும் பேசினர்.

# 'காணியைச் சுவீகரித்து நிலமற்றவர்களுக்குவழங்குக'

உடுப்பிட்டி, புதன்

துன்னாலை தெற்கு ஆட்டுப்பட்டிக் காணி முழுவதையும் அரசாங்கம் சுவீகரித்து நிலமற்ற சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதுடன் அக்காணிக்குள் வீடமைப்புத் திட்டமொன்றை அமைத்துத்தர வேண்டும் என்றும் வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர்கெனமனைக் கேட்டுக் கொள்வதெனத் துன்னாலை தெற்கு தயாநிதி கிராமமுன்னேற்றச் சங்கக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும்நிறைவேற்றப் பட்டுள்ளன

பொதுமக்களின் அபிப்பிராயமின்றி இரகசியமான முறையில் நெல்லியடிப் பட்டினசபையின் எல்லையை நிர்ணயித்ததைக் கண்டிப்பதுடன் மக்களுடையவேண்டுகோளுக்கு மதிப்பளித்து எல்லையை நிர்ணயிக்கும் வரை நெல்லியடி பட்டின சபைத் தேர்தலை நிறுத்தி வைக்கும்படி ஸ்தல ஸ்தாபன அமைச்சரைக் கோர வேண்டும்.

நெல்லியடிப் பட்டின சபை 6-ம் வட்டாரமான சிறுபான்மைத் தமிழர் வாழும் கனுவில் வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதித்துவம்பெற வழி வகுக்கும் முகமாக வட்டாரத்தை பிரித்துத் தர வேண்டுமென்றும் கோருவது.

கட்டைவேலிக் கிராம சபையின் 11-ம் 12-ம் வட்டாரங்களை ஒன்றுக இணைத்து சிறுபான்மைத் தமிழர்பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வகையில் செய்து தருமாறும் ஸ்தலஸ்தாபனஅமைச்சரை வேண்டிக் கொள்வது.


**KALANILAYA CAMBRIC**
கலாநிலைய கேம்பிறிக்
**WRITING PADS**
'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்

விற்பனைக்குண்டு
மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

**'ஈழநாடு'**
(வர்த்தக அச்சகப் பகுதி)
55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. சாஸனம் திருத்தப்பட வேண்டுமாம்

## 'வகுப்புவாதிகளை முற்றாக தோற்கடிக்க வேண்டும்'

கொத்மலை, புதன்

சமீபத்தில் நடைபெற்று முடிவடைந்த பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் வகுப்புவாதிகளையும் இனத்துவேஷம் பரப்புபவர்களையும் முற்றாக நிராகரித்துள்ளனர். இதனைத் தமிழ்மக்கள் நன்கு அவதானித்து உணர்ந்து எதிர்காலத்தில் செயலாற்றவேண்டும்.

வட இலங்கையிலும் வகுப்புவாதிகளை முற்றாகத் தோற்கடிக்கவேண்டும். அப்போதுதான் நிலையான தேசிய ஒற்றுமையும் நாட்டு முன்னேற்றமும் ஏற்படும்.

இவ்வாறு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு யூ. நவரட்ண கொத்மலையில் நடைபெற்ற மேற்படி யூனியன் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அக்கூட்டத்திற்கு ல. தோ. தொ. யூனியன் பிராந்திய கிளைத் தலைவர் திரு. கே. ஷெல்டன் டி சில்வா தலைமை வகித்தார்.

திரு. யூ. நவரட்ண மேலும் பேசுகையில் கூறியதாவது:

சாதாரண பொதுமக்கள் வகுப்புவாதிகளோ அல்லது இனவேற்றுமையாளர்களோ அல்லர். பதவி வெறி பிடித்த அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டு ஏமாற்றப்படுகின்றனர். எதிர்காலத்தில் அத்தகைய அரசியல்வாதிகளுக்கு நாட்டில் இடமில்லை வகுப்புவாத இனரீதியில் அரசியல் பிரச்சாரம் செய்து வந்த திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும் அவரது கும்பலும் சிங்கள மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டுள்ளனர்.

## புதிய நாடுகளைச் சேர்க்க அமெரிக்கா நிபந்தனை

### 'சிலஉரிமைகள் மறுக்கவேண்டும்'-பிரிட்டன்

லண்டன், ஜூன் 17

**ஐ.நா. சபையில் புதிய நாடுகளைச் சேர்த்துக்கொள்ள அமெரிக்காவும் பிரிட்டனும் சம்மதம் தெரிவித்துள்ளன. புதிய நாடுகளைச் சேர்ந்துக் கொள்வதானால் ஐ.நா. சாஸனம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் நாடுகள் சில உரிமைகளைத் தாமாகவே மறுத்துவிட வேண்டுமென்று பிரிட்டன் கூறியுள்ளது. பழைய அங்கத்துவ நாடுகளுக்குரிய உரிமைகள் சிலவற்றை இவர்களுக்கு வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஐ. நா. சபையில் குறிப்பாக மக்கள் சீனாவைச் சேர்த்துக் கொள்வதற்கு அமெரிக்கா மறுத்து வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது,

## துருக்கியில் பொலிசார் — தொழிலாளர் மோதல்

### மூவர் பலி; இராணுவச் சட்டம் அமுல்

அங்காரா, ஜூன் 17

துருக்கியில் தொழிலாளருக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட பலத்த மோதலில் ஒரு பொலிஸ்காரர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இங்கு இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

தொழிற்சங்க சட்டவிதிகளில் அரசாங்கம் சில மாற்றங்களை செய்ய உத்தேசித்திருப்பதை ஆட்சேபித்து தொழிலாளர் யூனியன்கள் ஆர்ப்பாட்டம்செய்தபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். அப்போது ஏற்பட்ட மோதலில் பலர் படுகாயமடைந்தனர்,

பொலிஸ் நிலையமொன்றைத் தாக்குவதற்குச் சென்றதொழிலாளர் கூட்டமொன்றைப் பொலிசார் தாக்கமுற்பட்டபோது, அவர்களைத் தாக்கவேண்டாம் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இதனால் கலகக்காரர் பொலிஸ் நிலையத்தை தாக்காமல் விட்டுச் சென்றனர் என்று கூறப்பட்டது.

## ரதோற்சவம்

தாவடி, வியாழன்

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது,

— —

## காணி விவசாய அமைச்சருக்கு மகஜர்

கல்முனை, புதன்

''பண்டித்தீவு, கரவாகுப் பத்து, சேவகப்பத்து ஆகிய வட்டைகளில் சுமார் 1,500 ஏக்கர் காணியில் 600 ஏக்கர் காணி மட்டுந்தான் விவசாயம் செய்யப்பட்டுவருகிறது. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் போதிய நீர்ப்பாசன, வாய்க்கால்களும், அணைக்கட்டுகளும் இல்லாமல் பாழடைந்துள்ளன'' இவ்வாறு கல்முனைக்குடி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கிளைக் காரியதரிசி ஜனாப் எம். எச். எம். அப்துல் காதர், காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பக்கடுவவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார். இது விடயத்தில் அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்,

— —

## "தீவுப்பகுதிக்கு மின்சார வசதி"

### மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் எம். பி. சமர்ப்பிக்கும் தீர்மானங்கள்

வேலணை, புதன்

எழுவைதீவு, அனலைதீவு நெடுந்தீவு, கழுதைப்பிட்டி நயினாதீவு மோட்டார் வள்ளச் சேவையை அரசாங்கம் நடத்த வேண்டுமென்றும் எழுவைதீவு, அனலைதீவு நெடுந்தீவு ஆகிய இடங்களில் தன்னியக்கதொலைபேசி வசதி அளிக்கப்பட வேண்டுமென்றும் ஊர்காவற்றுறை வாடிவீட்டைப் புதுப்பித்தலுடன் சுங்கப்பகுதிக் கட்டடத்தையும் திருத்துதல் வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்களை அடுத்து வரும் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்ட நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் கேட்டுள்ளார். அரசாங்க அதிபருக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள மற்றும் தேவைகளில் சில வருமாறு:

ஊர்காவற்றுறைத் தொகுதியில் முறையாக இயங்காத கிராமமுன்னேற்றச் சங்கம் சனசமூக நிலையங்கள் பற்றி ஆராய்தல்.

வேலணை மத்திய மகாவித்தியாலயம், புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயம் அனலைதீவு மகா வித்தியாலயம் என்பனவற்றிற்கு தகுந்த ஆசிரியர்கள் நியமித்தல், ஊர்காவற்றுறைத் தொகுதி பாடசாலைகளுக்கு நிரந்தரதலைமை ஆசிரியர் அதிபர் நியமித்தல்

அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை தெற்கு சோளாவத்தை சரவணை புளியங்கூடல் ஊரதீவுஇறுப்பிட்டி குறிகாட்டுவான் ஆகிய இடங்களிலுள்ள உபதபால் நிலையங்களுக்கு தொலைபேசிவசதி.

மற்றும் பாடசாலைத் தளவாடங்கள் வீதிகள் திருத்தல் உபதபால் நிலையங்கள் சம்பந்தப்பட்ட எல்லாமாக 19விஷயங்கள் நிகழ்ச்சிநிர

## சோயுஸ் 9 படங்களில் நைல்நதி; அஸ்வான் அணை

### விண்கலப்பயணம் தொடருகிறது

மாஸ்கோ, ஜூன் 17

ஜூன் 15-ம் திகதி மாஸ்கோ நேரம் 13 மணியாயிடுக்கும் போது சோவியத் விண்கலமான 'ஸோயுஸ்-9' பூமியைச் சுற்றிய தனது 220-வது வலத்தினைப் பூர்த்தி செய்து கொண்டது இதுவரை விண்வெளி வீரர்கள் ஆந்திரியன் நிக்கொலயேவ்வும், விதாலி செவஸ்டியானோவ்வும் 327 மணி நேரத்தை விண்வெளியில் கழித்துள்ளனர்.

விண்வெளி வீரர்களின் 14-வது வேலைநாள் அதிகாலை 3 மணிககு முடிவுற்றது. திட்டப் பிரகாரம் விண்வெளி வீரர்கள் விஞ்ஞான தொழில் நுட்பப் பரிசோதனைகளிலும், மருத்துவப் பரிசோதனைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

14-வது வேலை நாளின் ஆரம்பத்தில் காலை உணவையும், உடற்பயிற்சிகளையும் முடித்துக் கொண்ட பின்னர் விண்வெளி வீரர்கள் பூமியின் மேற்பரப்பினை படம்பிடித்ததுடன், பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டனர். ஆபிரிக்கக் கண்டம் விண்வெளி...

...ன்மை நிலைமையின் கீழ் பல பல விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். விண்வெளி வீரர்களின் வேலை நாட்கள் ஒவ்வொன்றும் 16 மணிநேரம் நீடித்தன.

இந்த காலகட்டத்தினுள் விண்வெளி வீரர்களின் உடல் நிலை குறித்த ஒழுங்கான மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. நீண்டகால விண்வெளிப் பயணச் சூழ்நிலைமைகள் யாவற்றையும் இரு விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாகச் சமாளித்து வருகின்றனர் என்பதை மேற்படி மருத்துவப் பரிசோதனைகள் பற்றியஆய்வொன்று கூட்டுகிறது. ஆந்திரியன் நிக்கொலயேவ்வினதும், விதாலி செவஸ்டியானோவ்வினதும் பணியாற்றல் திறமை போதுமான அளவுக்கு உயர் மட்டத்திலுள்ளது. அவர்கள் வெகு உற்சாகமாக உள்ளனர்.

## கம்போடிய விவகாரம்: மாஸ்கோவில் சந்திப்பு

மாஸ்கோ, ஜூன் 17

கம்போடியாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஜப்பான், மலேசியா, இந்தோசீனா ஆகிய நாடுகளைச் [illegible]ர்ந்த தூதுக்குழு நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்தது.

கம்போடியாப் பிரச்னை சம்பந்தமாக சோவியத் யூனிய[illegible]ன் உதவியை நாடி இங்குவந்துள்ள 6 பேர் கொண்ட தூதுக்குழு, ரஷ்யப்...

அண்மையில் ஜகார்தா[illegible] நடைபெற்ற ஆசியநா[illegible]ளின் மகாநாட்டில் நியமிக்கப்பட்ட இந்தத் தூதுக்குழுவுக்கு இந்தோசீனாப் பிரதிநிதி ஆதம்மாலிக் தலைமை தாங்கிவந்துள்ளார்.

கம்போடியாவிலிருந்[illegible] அமெரிக்கத் துருப்புகள்

## முன்னணி வெற்றிக்கு ஜெர்மன் முன்னணி வாழ்த்து

பெர்லின், ஜூன் 17

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுத் தேசிய முன்னணியின் தலைவர் பேராசிரியர் எரிச்கொரன்ஸ் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் மகத்தான வெற்றியைக்குறித்து இருதயபூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவித்து அவருக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

இலங்கை சமசமாஜக்கட்சிக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஐக்கியமுன்னணியின் கீழ் திரண்டுள்ள மக்களுக்கும் அவர் தமது வாழ்த்துகளைத்தெரிவித்துள்ளார்.

'ஐக்கிய முன்னணி தனது நோக்கமான சமாதான ஜனநாயக முற்போக்கு இலங்கையைக் கட்டியெழுப்புவதில் வெற்றிபெறுக' என்று ஜெர்மன் மக்கள் வாழ்த்துவதாகவும், இருமுன்னணிகளுக்கும் இருநாடுகளுக்குமிடையே நட்புறவு மென்மேலும் வலுவடையுமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஏ. டி. எஸ்.)

## 'இந்தியர் பிரச்னையில்முழுக் கவனம் எடுப்பேன்'

### — டாக்டர் கொல்வின்

அகலவத்தை, புதன்

'மக்கள் அரசாங்கம் இந்நாட்டின் அபிவிருத்திக்கு புதிய பாதை வகுப்பதுடன் வேலையில்லா திண்டாட்டம்' வீட்டுப் பிரச்னை, வாழ்க்கைச்செலவு ஆகியவற்றை தீர்த்து வைக்கும். அத்துடன் இழந்த ஒரு கொத்து அரிசியைத் திரும்பவும் கொடுக்கும்.'

இவ்வாறு தோட்டத் தொழில் மந்திரி டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா ...

...காக கடந்தகால டட்லி சேனநாயக்கா அரசாங்கம் சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்தத் தவறியது.

925000 நாடற்ற இந்தியர்களில் 525500 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்படுவர். 300,000 பேர் இலங்கை குடிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

பல ஏழைத் தொழிலாளர்கள் தொண்டமானின் சிபார்சில்லாமல் குடியுரிமை...

## எம். ஸி. க்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், வியா.

''அமைதி, சமாதானம், தேசிய ஐக்கியம் ஆகியவற்றை பேணும் வகையில் இயங்கும் கூட்டணி அரசாங்கம் உங்களை நியமன ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்து வரலாற்று முக்கியம் கொண்ட ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளது.''

இவ்வாறு மானிப்பாய் கிராமசபை உறுப்பினரும், சமாதான நீதவானுமான திரு. மு. சுந்தரமூர்த்தி புதிய நியமன ஆட்சி மன்ற உறுப்பினரான திரு. எம். சி. சுப்பிரமணியத்திற்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கும் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் கேட்டுள்ளார். அரசாங்க அதிபருக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள மற்றும் தேவைகளில் சில வருமாறு;

ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு மின்சாரம் வழங்குதல் புளியங்கூடல் ஊரதீவு இறுப்பிட்டி குறிகாட்டுவான் ஆகிய இடங்களிலுள்ள உபதபால் நிலையங்களுக்கு தொலைபேசிவசதி.

மற்றும் பாடசாலைத் தளவாடங்கள் வீதிகள் திருத்தல் உபதபால் நிலையங்கள் சம்பந்தப்பட்ட எல்லாமாக 19விஷயங்கள் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட வேண்டுமென எம். பி கேட்டிருக்கிறார்.

14-வது வேலை நாளின் ஆரம்பத்தில் காலை உணவையும், உடற்பயிற்சிகளையும் முடித்துக் கொண்ட பின்னர் விண்வெளி வீரர்கள் பூமியின் மேற்பரப்பினை படம்பிடித்ததுடன், பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டனர். ஆபிரிக்கக் கண்டம் விண்வெளி வீரர்கள் பார்வையில் வெகு தெளிவாக விழுந்தது. அவர்கள் நைல் நதிப் பள்ளத்தாக்கினையும், அஸ்வான் அணையையும் படமெடுத்துக் கொண்டனர்.

விண்வெளி வீரர்கள் விண்வெளியில் 14 நாட்களாகப் நாட்களாகப் பயணம் மேற்கொண்டுள்ளனர். நீண்டகால எடையி

இந்தோசீன ஆகிய நாடுகளைச் [...]ர்ந்த தூதுக்குழு நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்தது.

கம்போடியாப் பிரச்னை சம்பந்தமாக சோவியத் யூனிய[...]ன் உதவியை நாடி [...]ருவந்துள்ள 6 பேர் கொண்ட தூதுக்குழு, ரஷ்யப் பிரதமர் கொசிஜினையும் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துப் பேசவிருக்கிறது.

அண்மையில் ஜகார்தாவி[...] நடைபெற்ற ஆசியநாடு[...]ளின் மகாட்டில் நியமிக்கப்பட்ட இந்தத் தூதுக்குழுவுக்கு இந்தோசீனப் பிரதிநிதி ஆதம்மாலிக் தலைமை தாங்கிவந்துள்ளார்.

கம்போடியாவிலிருந்[...] அமெரிக்கத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்ற விடயமும் ரஷ்யப்பிரதமருடன் நடைபெறவிருக்கும் சந்திப்பின் போது வலியுறுத்தப்படவிருக்கிறது.

வீட்டுப் பிரச்னை, வாழ்க்கைச்செலவு ஆகியவற்றை தீர்த்து வைக்கும். அத்துடன் இழந்த ஒரு கொத்து அரிசியைத் திரும்பவும் கொடுக்கும்.'

இவ்வாறு தோட்டத் தொழில் மந்திரி டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா அகலவத்தையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்தியர் பிரச்னையைத் தீர்ப்பதில் முக்கிய கவனம் எடுப்பேன். சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடாத்துவதில் எனது பதவிக்காலத்தின் பெரும்பகுதியைச் செலவழிப்பேன்.

அரசியல் லாபம் கருதி தொண்டமானின் தயவை மலைநாட்டுத் தேர்தல் தொகுதியில் பெறுவதற் என்றுர்.

925000 நாடற்ற இந்தியர்களில் 525500 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்படுவர். 300,000 பேர் இலங்கை குடிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

பல ஏழைத் தொழிலாளர்கள் தொண்டமானின் சிபார்சில்லாமல் குடியுரிமை பெற கடந்த காலத்தில் முடியவில்லை. பல முக்கிய அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் மீறப்பட்டுள்ளது. இதனால் நாட்டிற்கு உழைக்கும் இத்தொழிலாளர் பலத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தகால அரசாங்கம் தீர்க்கத்தவறிய வேலையில்லாத் திண்டாட்டத்தை எமது அரசாங்கம் தீர்த்து வைக்கும். வாலிபர்களுக்கு அதிக சந்தர்ப்பம் கொடுக்க ஆவன செய்யத் தயங்கோம் என்றுர்.

சுப்பிரமணியத்திற்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவிற்கும் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள அச்செய்தியில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை ஆட்சிமன்றத்திற்கு நியமித்ததால் ஒடுக்கப்பட்ட மக்களின் இதயத்தருகே மேலும் நெருங்கி வந்துள்ளீர்கள். திரு. எம். சுப்பிரமணியத்திடமிருந்தும், உங்களிடமிருந்து இந்நாடும், எமது சமூகமும் அதிகம் எதிர் பார்க்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்,

(கு வி ம)

## 'தீய பழக்கங்களே புற்றுநோய்க்குக் காரணம்'

உடுவில், புதன்

''சாதாரண மக்களிடையே அவர்களுக்கு தெரியாமலே பழகிவிட்ட சில பழக்கவழக்கங்களினுலேதான் இன்று கொடிய நோய்களுக்கு அவர்கள் இலக்காக வேண்டி இருக்கின்றது. இன்று நம்மத்தியில் மலிந்துள்ள புற்றுநோய்க்கு எமது பழக்கங்கள்தான் காரணம். புற்றுநோய் ஒரு தொற்றுநோயோ அல்லது பரம்பரை நோயோ அல்ல. நம் உடம்பின் உட்புறப்பகுதிகளுக்கு நாம் அதிக வேலைகொடுப்பதே இந்நோய் ஏற்பட வழிசெய்கிறது. ஆரம்பத்திலேயே புற்றுநோய் சிகிச்சை பெற்றுவிட்டால் அதனை முற்றுகவே மாற்றிவிடமுடியும்.''

சுகாதாரவாரத்தை முன்னிட்டு மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர் மத்தியில் 'புற்றுநோயும் மாற்றும் முறைகளும்' என்ற விஷயம்பற்றி உரையாற்றிய மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரி வைத்தியர், டாக்டர் கெங்காதரன் மேற்கண்டவாறு கூறினர்,

மேற்படி கல்லூரி அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

டாக்டர் கெங்காதரன் மேலும் பேசியதாவது: எமது தேகத்தின் வெளிப்பாகத்தில் காயங்கள் ஏற்பட்டால் அவை நாளடைவில் வளர்ந்து காய்ந்துவிடுகின்றன. உடலின் உட்புறத்தில் உள்ள இழையங்களில் இடைவிடாது நடைபெறும் தேய்வுகளினுல் அவை வளர்ச்சிபெறுது அங்கு சிறு சிறு புண்கள் தொற்றுகின்றன. நாளாவட்டத்தில் இவை வளர்ந்து புற்றுநோயாக மாறுகின்றன.

இடைவிடாது வெற்றிலை, பாக்கு, புகையிலை சாப்பிடுதல், புகைத்தல், மதுபானம் அருந்துதல், போன்றவற்றின் காரணமாக இழையங்களில் ஏற்படும் தேய்வுகளே புற்றுநோயை உண்டுபண்ண வழி செய்கின்றன.

ஆசிரியர்கள் உரத்துப் பாடங்களை கற்பிப்பதனுலும் அவர்களின் தொண்டைக்குழாய்கள் தேய்வடைந்து புற்றுநோய் உண்டாகும். பெண்களுக்கு கர்ப்பப்பைகளில் ஏற்படும் தேய்வு இந்நோயைஏற்படுத்துகின்றது. எனவேஎசுற்கும் நாம் எச்செயலையும், பழக்கங்களையும் குறித்த அளவோடு நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும்.''

வைத்திய ஆலோசகர் திரு. சண்முகராஜா பேசுகையில், மாணவர்களுக்கு சிறுபுண்கள் ஏற்பட்டு இருவாரத்திற்குள் மாறுதுவிட்டால் அவர்கள் வைத்தியரிடம் செல்லுதல் நல்லதெனவும் ஆசிரியர்கள்கூட இருவாரங்களுக்குமேல் தொண்டை அடைந்திருந்தால் வைத்திய ஆலோசனை பெறுதல்வேண்டும் என்றும் சொன்னர்.

### சுகாதார அதிகாரி உரை

வல்வெட்டித்துறை, புதன்

சுகாதார வாரத்தையொட்டி வல்வை சிதம்பரா கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. புவிராசசிங்கம் புற்றுநோய் பற்றி உரை ஆற்றினர்.

சுகாதார அதிகாரி தமது உரையில் கூறியதாவது:

''புற்றுநோய் மனிதனை மாய்க்கும் பயங்கர வியாதி என்று சொல்லப்படுகிறது. இன்று உலகில் எல்லாப் பாகங்களிலும் பரவலாக இருந்து மக்களைக் கொன்று வருகிறது இந்நோய். இந்நோய் முற்றினுல் சிகிச்சை பயனளிப்பது துர்லபம். ஆகவே ஆரம்பகாலத்திலேயே இதன்குணத்தை அறிந்து சிகிச்சை பெற்ருல் நோயினின்றும் தப்பிக்கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

நீண்டநாள் ஆருப்புண்கள், சடுதியான தசை வளர்ச்சிகள், கட்டிகள் காணும்போது தகுந்தவைத்தியரிடம் காட்டி, ஆலோசனை பெற்று சிகிச்சைபெற வேண்டும்

இந்நோய்க்கு குடியும், புகையிலைப் பழக்கமும் காரணங்கள் என்று சொல்லப்படுகின்றது.

இந்நோய் உடம்பின் எப்பாகத்திலும் உண்டாகலாம் மூளை, தொண்டை இருதயம், கருப்பை இவைகள் தாம் பெரும்பாலும் பாதிக்கப்படுவதாகும்.''

அதிபர் இ. சச்சிதானந்தம் கூட்டத்திற்குத்தலைமை வகித்தார்.

## துருக்கியிலிருந்து அமெரிக்கர் வெளியேற்றம்

மாஸ்கோ, ஜூன் 17

துருக்கியிலிருந்த அமெரிக்கர்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதாக சோவியத் செய்திஸ்தாபனம் என்று கூறியுள்ளது.

சமாதானப் படைஎன்ற போர்வையில் உளவுபார்க்கும் வேலைகளில் இந்த அமெரிக்கர்கள் ஈடுபட்டதாக துருக்கி மக்கள் கருதியதால், இவர்கள் நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாக அந்தச்செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை தேர்தல் முடிவு அமெரிக்காவுக்கு அடி

பெர்லின், ஜூன் 17

பொதுத் தேர்தலில் திரு. சேனநாயக்காவின் ஏகாதிபத்தியச் சார்புக் கொள்கையை நிராகரித்ததால், அந்த அரசாங்கக் கட்சி எல்லாவகையிலும் உதவி செய்து வந்த அமெரிக்காவுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் ஓர் அடி விழுந்துள்ளது இவ்வாறு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் பிரபல பத்திரிகையான ''நியூஸ் டொச்லண்ட்'' எழுதியுள்ளது.

கடந்த ஆண்டில்இலங்கையின்பொருளாதார வளர்ச்சி 50% குறைந்து சாமான் விலைவாசிகள் கூடி வேலையின்மை அதிகரித்திருக்கும் சந்தர்ப்பத்திலே திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கத்தை மேற்கொண்டுள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டும் இந்த ஏடு எதிர்கால சுபீட்ச இலங்கையை நிர்மாணிப்பதற்காகப் பணியாற்றுவதற்குச் சிறந்த பொது வேலைத்திட்டமொன்று புதிய அரசாங்கத்தின் கையிலிருப்பது குறித்து மசிழ்ச்சி தெரிவித்துள்ளது.

(ஏ. டி. என்.)

## ஜனர்த்தனம் சொற்பொழிவு

உடுப்பிட்டி, வியாழன்

திருவனந்தபுரம் பன்மொழிப் புலவர் திரு. ப. ஜனர்த்தனம்பிள்ளை இன்று கரணவாய் தெற்கு வெற்றியகாட்டுப் பிள்ளையார் கோவிலில்

### உரிமைகள் மறுக்கப்படும் போது

## 'புதுவிதமானபோராட்டத்தை ஆரம்பிக்கஎண்ணியுள்ளோம்'

— கா. பொ. இரத்தினம்

அல்லைப்பிட்டி, புதன்

'தமிழரசுக் கட்சியின் வெற்றி தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல. அது இந்நாட்டுத் தமிழர்கள் ஒவ்வொருவருடைய வெற்றியாகும். தமிழ் பேசுமினம் தமிழரசுக்கட்சியினுடைய கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் மதிப்பளித்து வந்துள்ளது என்பதைநடைபெற்று முடிந்த தேர்தல் உறுதிப்படுத்துகிறது.' என ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அல்லைப்பிட்டியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தேர்தல் முடிந்துவிட்டபின் எங்களுடைய கடமைகள் முடிந்துவிட்டதென மக்கள் எண்ணக்கூடாது. தமிழரசுக்கட்சியினர் எடுக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கமென்றுலும் சரி, ஐக்கியமுன்னணி அரசாங்கமென்றுலும்சரி எங்களது உரிமைகளை தரும் பட்சத்தில் அவர்களுடன் நாங்கள் ஒத்துழைப்போம். எங்களது உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் நாம் புதுவிதமான போராட்டத்தை ஆரம்பிக்க எண்ண

சமயச்சொற்பொழிவு நிகழ்த்த தென் கருணையம்பதி இந்து வாலிபர்சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

# கடத்தப்பட்ட மே. ஜெர்மன் தூதுவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை

## 'உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் கடத்தல் காரரே பொறுப்பு' - பிரேஸில்

றெயோடிஜெனரோ, ஜூன் 17

தீவிரவாதிகளின், நிபந்தனையை ஏற்றுக்கொண்டு சிறைவைக்கப்பட்டிருந்த 40 கைதிகளையும் விடுதலை செய்த பின்னரும் கூட, கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜெர்மன் தூதுவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று பிரேசிலிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவித்தன.

கடத்தல்காரரின் பேரத்தை நிறைவேற்றிய பின்னரும் தூதுவர் விடுவிக்கப்படாதது குறித்து பிரேசில் அரசாங்கம் கவலைகொண்டுள்ளது. அத்துடன் மேற்கு ஜெர்மன் தூதுவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், அதற்கு கடத்தல்காரரரே பொறுப்பு என்று பிரேசில் எச்சரித்துள்ளது.

அண்மையில் பிரேசில் நாட்டிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதுவர் எஹ்ரன்ஃப்ரிட்டுவான் ஹல்பன் என்பவரைக் கடத்திச்சென்ற தீவிரவாதிகள், பிரேசில் அரசாங்கம் சிறைப்பிடித்துள்ள கைதிகளை விடுதலை செய்து அல்ஜீரியாவுக்கு திருப்பி அனுப்பியதும் தூதுவரை உயிருடன்விட்டு விடுவதாகக் கூறியிருந்தனர்.

இதன்படி விடுதலைசெய்யப்பட்ட சிறைக்கைதிகள் அல்ஜீரியா போயடைந்தும், தாம்பிரேசில் அரசாங்கத்தால் சிறைக்கூடத்தில் இம்சைப்படுத்தப்பட்டதாக கூறியுள்ளனர்.

தூதுவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாதென பிரேசில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## வறியமக்களின் துயர்துடைப்போம்

கொழும்பு, புதன்

கூட்டணி அரசாங்கம் எதிர்வரும் 5 வருடத்தை மனதில் கொள்ளாது அடுத்த சந்ததியினரை மனதில் கொண்டு செயல்படும். இவ்வாறு வனப்புவ ஆட்சிமன்ற உறுப்பினர் அஸ்ரின் பொன்சேகரா காற்றவிலா என்னும் இடத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினர்.

தொடர்ந்து பேசும்போது கூறியதாவது. வனப்புவத் தொகுதிக்கு அதிக தேவைகள் உடனடியாகச் செய்ய வேண்டி உள்ளன. நாம் அடுத்த சந்ததியின் நன்மையைக்கருதிச் செயல்படுவோமேயன்றி 1975ம் ஆண்டு தேர்தலைக் கருதிச் செயல்பட்டோம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கும்போது தான் வறியமக்களின் துயர் நீக்கும். கூட்டணி தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குகளை நிறை வேற்றி வைக்கும்.

## மானிப்பாய் அந்தோனியார் மஹோற்சவம்

தாவடி, வியாழன்

மானிப்பாய் புனித அந்தோனியார் திருவிழா இம்மாதம் 10-ந் திகதி ஆரம்பமாகி, தினமும் செபமாலை, தியானம், திருப்பலி என்பவற்றேடு நடைபெற்று வருகின்றன,

இன்று மாலை நற்கருணை ஆராதனை, வண. என். எம். சவிரிமுத்து சுவாமியாரால் நடாத்தப் படுகிறது. அத்துடன் கதாப்பிரசங்கம், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

நாளை காலை திருநாட்பாடற் பூசையும், திருச்சொரூபப் பவனியும் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

## கன்னிகையாக வாக்குத்தத்தம்

பண்டத்தரிப்பு, புதன்

நெடுந்தீவைச் சேர்ந்த ஆசிரியர்சின்னத்துரைதம்பதிகளின் மகள்சிஸ்டர் மேரி ஒலிவியா (செல்வராணி) இம்மாதம் 18ந்திகதி பண்டத்தரிப்பு திருக்குடும்ப கன்னியர் மடத்தில்மேற்படிசபையின் கன்னிகையாகநித்திய வாக்குத் தத்தம் கொடுக்கவிருக்கின்றார். பண்டத்தரிப்பு திருக்குடும்ப கன்னியர் மடசிற்ருளயத்தில் இதற்கான சடங்குகள் நடைபெறவிருக்கின்றன.

யுள்ளோம். இதற்கு தமிழ் பேசும் மக்கள் தயாராக வேண்டும். கடந்த வருடங்களில் நான் எப்படி கிளிநொச்சி தொகுதிமக்களுக்கு தொண்டாற்றினேனே அதுபோல் ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களின் குறைகளை அறிந்துபாரபட்சமற்ற சேவை செய்ய ஆயத்தமாய் உள்ளேன் என்றும் கூறினர். கூட்டத்தில் வேறுபலரும் உரையாற்றினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகத்திலே இப்போது பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. எல்லாம் நன்மைக்குத்தான். அன்பும் சகோதரத்துவமும் வளர்ந்து உலக மக்களுக்கு மகத்தான எதிர்காலம் காத்திருக்கிறது. கடவுள் கருணையுள்ளவர். அவர் தூங்குவதில்லை. அவரையே நம்பி வாழபவருக்கு ஒரு தீங்கும் வராது. மக்களின் சங்கடங்களுக்கு அவர்களேதான் பொறுப்பாவர். — சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 4-ந் திகதி (18-6-70)


## விரும்பத்தகாத யோசனை

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலை அரசாங்கத்துக்கு ஒருவிரும்பத்தகாத யோசனையைக் கூறியிருக்கிறாராம். அதாவது வடக்குக் கரையோரப் பகுதிகளில் கள்ளக் கடத்தலும் கள்ளக் குடியேற்றமும் நடப்பதாகவும் அவற்றைத் தடுக்க இராணுவ காவல் படையை மேலும் பலப்படுத்த வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது

இலங்கையில் மட்டுமல்ல மற்றநாடுகளிலும் கள்ளக் கடத்தல்கள் நடக்கின்றன. அதைத் தடுக்க உலகில் எந்த நாட்டிலும் இராணுவத்தைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை பொலிசாரும் சுங்க காவலருமே இக் கடமையைப்பார்க்கின்றனர் அப்படி இருக்க இலங்கையில் மட்டும் இராணுவ உதவியைக் கேட்பானேன்? மேலும் வடக்கில் மட்டுமன்றி இலங்கையைச் சுற்றிலும் பல இடங்களிலும் கள்ளக்கடத்தல்கள் நடப்பது பகிரங்க ரகசியம். அப்படி இருக்க வடக்குக் கரையில் மட்டும் இராணுவத்தைப் பலப்படுத்துவானேன்? ஏன் இந்த வேற்றுமை நடவடிக்கை.

சென்ற பல ஆண்டுகளாக வடக்குப் பகுதியில் இராணுவத்தை வைத்துள்ளதால், இங்கு பொதுமக்கள் நிம்மதியாக வாழமுடியாமலுள்ளது. இராணுவத்தினருக்கும் இது பிடிக்காத தகுதியற்றவேலை, இராணுவ காவலை பல ஆண்டுகளாக வைத்திருந்தும் கள்ளக் கடத்தல் நிற்கவில்லை. சட்ட விரோதக்குடியேற்றம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் இங்கு இராணுவக் காவலை பயன்படுத்த எவ்வித நியாயமுமில்லை. வடக்கிலுள்ள தங்களை அடக்கி ஆளுவதற்காகத்தான் இராணுவக் காவல் முகாம்களை இங்கு ஏற்படுத்தி வைத்துள்ளதாக இப்பகுதியில் பொதுமக்களுக்குப் பெரிய மனத்தாங்கல் உண்டு.

ஆகவே இவ் விஷயத்தைப் பற்றி பிரதமர் அடியோடு விசாரித்தால் ஏற்கனவே இங்குள்ள இராணுவ முகாம்களையும் அகற்றவேண்டிய அவசியத்தை உணரக்கூடும். கள்ளக்கடத்தல் முதலியவற்றைத் தடுக்க விசேஷ பொலிசையும், மக்கள்சபையையும் அரசாங்கம் ஏன் பயன்படுத்தக்கூடாது. பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றால்தான் இந்தப் பிரச்னை தீரமுடியும். இதற்கு பதில் இராணுவத்தை அதிகம் பலப்படுத்துவதாயின், நோக்கம் நிறைவேறாததுடன் அரசாங்கம் இங்குள்ள பொதுமக்களின் வீண் மனக்கசப்பைப் பெறவேண்டியதாக இருக்கும். அதற்கு பிரதமர் ஸ்ரீமா எக்காரணம் பற்றியும் இடம்கொடுக்க மாட்டாரென்றே நம்புவோம்.

## எம். பிக்கள் சங்கடம்

பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள எம். பிக்களைப் பற்றி யாரும் பொறாமைப்பட முடியாது. வேலை வேண்டித்தரவும், இடமாற்றம் செய்யவும் பொதுமக்களில் பலரும் பார்லிமென்ட் மெம்பர்களின் உதவியையே நாடுகின்றனர். தேர்தலில் தங்களை ஆதரித்தவர்களையும் ஆதரிக்காதவர்களையும் கூட வாக்கு இருக்கப்போகிறதென்பது இனித்தான் தெரியவேண்டும்' எப்படியும் இப்படி தனிப்பட்டவர்களின் பணியில் எம் பி.மார்கள் ஈடுபடுவதாயின் வேறு பொது விஷயங்களைக் கவனிக்க அவர்களுக்கு அவகாசம் இருக்குமா என்பது சந்தேகம். எம். பி மார்களின் இந்தச் சங்கடத்தை உணர்ந்து அவர்களுக்கு நிவா

### இன்று நயினை ரதோற்சவம்

# விண்ணுலகை ஈர்க்கும் மண்ணுலக விழா

— சைவப்புலவர் க சிற்றம்பலம் —

உலக மக்களின் உள்ளங்கவர்ந்த உத்தபூமமியாகிய இலங்காதேவியின் உதரத்துதித்ததாகிய மணிமுத்துக்கள் என மதித்தெண்ணக் கூடிய தீவுக் கூட்டங்களின் தெய்வச் சோதியாக விளங்குவது நயினதீவு. அங்கு சகல லோகநாயகியாகிய சக்தி மெய்யன்பர்களின் உள்ளங் குளிர அவர்களின் பக்தி பரவச தோற்றத்தைக் காண வேண்டுவார்க்கு வேண்டுமருள் ஈந்துவக்க இன்று சித்திரத் தேரில் ஆரோகணிக்கின்றாள்.

வெளியூர் பக்தரெல்லாம் அநேகமாக முதல் நாளே நயினைக்கரை சேர்ந்திடுவர். கடல் வெள்ளத்தில் மிதந்து செல்லும் பக்தர் வெள்ளம் உள்ளத்தில் ஊறிய அருள் பொங்க நயினை நாக பூஷணித் தாயை எண்ணியெண்ணி 'அரோகரா', 'அரோகரா' என்னும் தெய்வீக ஒலி திலர கடல் முழுதும் ரீங்காரம் எழுப்பும். கடலில் வள்ளங்களிலுள்ள பக்தர் கூட்டங்களை கோபுர நுனியில் அசைந்து அசைந்து ஆடும் கொடி அல்லல்தீர்த்து அருள் பரிபாலிக்க ஓல்லைவா, வா என்று அழைப்பது போன்ற உணர்ச்சியை உள்ளத்தில் பாய்ச்சி, பக்திபரவசப்படுத்துவதை ஏற்படுத்தும். கோபுரம் கண்டாருள்ளமெல்லாம், தேவியின் தியானமாகவே பரந்துநிற்கும். இறங்குதுறையைச்சேர்ந்ததும் கோபுரவாசலில் இறங்கி கூட்டம் கூட்டமாக பக்தர்கள் பால் நினைந்தூட்டும் தாயினைக் கண்ட பாலகர் போல அருட்தாயின் அன்பினில் பின்னிப் பிணைக்கப்பட்டவர்களாய் ஆனந்தக் களிப்புடன் ஆலயத்தருகே சென்று தங்களின் புறச் சுத்திகளைச் செய்து ஆசார சீலர்களாக அம்பிகையின் அலங்காரத் தேர் பவனியைக் காண ஆயத்தமாவர்.

உலகமாதாவாகிய நகேஸ்வரி அருட்திருக் கோலத்தைத் தன்னகத்தே கொண்டவளாய் ஆடியாடி அசைந்து, அசைந்து அலங்காரத்தேர்மீது வந்து பக்தர்களுக்கு அருள்செய்யும்காட்சியைக் காணில் கல்மனமும் கசிந்துருகி அம்பாளின் அருள்ஒழுகும் வதனத்தைப் பார்த்தபடியே நின்று ஆனந்தத் தாண்டவம் புரிவதைக் காணலாம்.

தேவியின் தோற்றத்தைக் கண்ட பக்தர் குழாம் தேவியின் புகழை மனத்தில் தியானமாகக் கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடுவார்கள். சிலர் மெய்மறந்து தேவியின் திருநாமத்தை பண்ணுேடு பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் பக்திப்பரவசத்தில் திளைத்து நிற்பர். வெள்ளமெனத் திரண்ட கள்ளமற்ற உள்ளங்கொண்ட பக்தர் கூட்டம் கோஷ்டி, கோஷ்டியாக பஜனை பாராயணம் செய்யும் ஒலி, விண்ணவரும், மண்ணுலகை நாடி வரச் செய்யும்வண்ணமாக இருக்கும். மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ச்சி கொள்ளும் திருநாளாக இத் தேர்த்திருவிழா அமைந்திருப்பதைக் காணும் கண்கள் என்ன புண்ணியம் செய்தனவே.

## காரைநகரில் சுதந்திரக்கட்சிக் கிளை

காரைநகர் புதன்

காரைநகரில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளை ஒன்று அமைக்கப்பட்டது. மேற்படி கட்சிக்கிளைக்கு திரு எஸ் ஆர். எஸ். தேவதாசன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

கட்சிக் கிளையைத் தொடக்கி வைத்து தலைவர் பேசும்போது: சிங்கள மக்களுடன் தமிழ் மககளாகியநாமும் ஒற்றுமையுடன் இணைந்து முன்னேற்றப் பாதையில் சென்று சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டும் அப்படிச் செய்யாவிடின் நாங்கள் பின்தங்கிய சமூகத்தினர் ஆகிவிடுவோம்.

கடந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் கூட்டணி அபேட்சகர் ஒருவரையாவது ஆட்சிமன்றம் அனுப்பத் தவறிவிட்டோம். எனவே வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசாவை மக்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து நாட்டிற்கும்தொகுதிக்கும் மொழிக்கும் சேவை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். இதுவே இன்றைய அரசியல் நிலையில் மிகவும் புத்திசாலித்தனமாகும்'' என்றார்.

— —

## குரங்குகள் தொல்லை

மட்டுவில், புதன்

மட்டுவில் கந்தர் மகாவித்தியாலயத்தில் குரங்குகளின் தொல்லை மீறிவிட்டதாகவும் இதனால் பாடசாலை மண்டபத்தினதும் வகுப்பறைகளினதும் கூரைகள் நாசமாகின்றன வென்றும் இதை இதுவரை சுட்டு விரட்டியிருக்கலாம் ஆனால் இப்பகுதியில் ஆஞ்சநேயர், பக்தர்கள் யாராவது இருக்கிறார்களா? அதன் ... காரணமாகத்தான் சுட்... விரட்ட முடியவில்லையா என்றுபுதிய அதிபர் திரு பெ. சபாரத்தினம் கவலை தெரிவித்தார்

இங்கு மாணவர்களினால் செய்யப்படும் ...ட்டங்களையும் பயிர்களையும்அழித்துக் கொண்டிருக்கின்றன

# நாகம்மை தோத்திரம்

அன்னையாய்த் தந்தையாய் யாவுமாய் நின்ற ஒரு
அருவுருவ மானஜோதீ
ஆதியொடு அந்தமும் நடுவாகி நிலைநின்ற
அரனிடப் பாகவு... யே
புன்முறுவலாகிமக பூதகண தலைவனைநின்
பொற்கரம் தாங்கியருளி
பொருதியே வருசூரன் மார்பைப் பிடிக்கவேல்
புதல்வனுக்கீந்த தாயே
கன்மாதி கன்மமெனு... மாயையில்
அலைந்துழலும்

# இலக்கிய விழாக்களுக்கு யாழ்ப்பாணத்தில் மண்டபம்

## பிரதேசக்கலை மன்ற இலக்கியக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், வியாழன்

புத்தகவெளியீடுகள்; இலக்கிய மாநாடுகள். விழாககள் மற்றும் இலக்கிய சம்பந்தமான கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கு யாழ்ப்பாண எழுத்தாளர்கள் இடமின்றிப்படும் கஷ்டங்களைப் போக்கு முகமாக யாழ்ப்பாணத்தில் ஒரு கட்டிடம் அமைக்க யாழ்ப்பாணமாவட்டக் கலை மன்றஇலக்கியக் குழு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது.

இது சம்பந்தமாகக் குழு எடுக்கும் முயற்சிகளுக்கு உதவுமாறு கலை கலாச்சார அமைச்சரைக் கோருவதென்ற பிரேரணை யாழ்ப்பாண அரசுசெயலக மகாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் குழுத்தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது

வேறு தொழில் செய்ய முடியாத நிலையில் ஜீவனத்திற்குக் கஷ்டப்படும் எழுத்தாளர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்க வேண்டுமென்றும், பாடசாலைகள், கல்லூரிகள் தோறும் இலக்கிய மன்றங்கள் அமைக்குமாறு அவற்றின் அதிபர்களைக் கோருவதென்றும், மாகாணத்தில் அமைந்துள்ள எல்லா வாசிகசாலைகளையும் ஜனசமூக நிலையங்களையும் ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு நல்குமாறு கோருவதென்றும், இலக்கிய விழாக்கள் மகாநாடுகள் நூல்அறிமுகம் முதலானவற்றில் ஈடுபட்டு ஈழத் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்குமாறு எல்லா ஸ்தலஸ்தாபன சபைகளையும் கோருவதென்றும் குழு தீர்மானிக்கும்.

மற்றும் இலக்கிய நிறுவனங்களும் எழுத்தாளர்கள் தனிப்பட்ட முறையிலும் வெளியிடும் இலக்கிய ஆக்கங்களுக்கு அரசாங்கம் நிதி உதவ வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுவதுடன்வேறுபல இலக்கிய சம்பந்தமான பிரேரணைகளும் கொண்டுவரப்படவிருக்கின்றன.

குழுவின் உறுப்பினர்களில் சிலர் உத்தியோகமாற்றலாகி வெளியூர்களில் உள்ளதால் அவர்களுக்குப்பதில் வேறு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதுபற்றியும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

## 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிதிக்கு ஒரு நாள் சம்பளம்!

யாழ்ப்பாணம், வியா

அகில இலங்கை அரசாங்க பொது காவலாளர் சங்கம் யாழ்ப்பாணத்தில் ... டி, சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது ஒரு நாள் சம்பளத்தை அரசாங்கத்தின் நாட்டை காப்பாற்றும் நிதிக்காக வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானித்ததுடன் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரதமரானதையொட்டித் தமது மகிழ்ச்சியைப் பிரதமருக்குத் தெரிவிப்பதென்றும் தீர்மானித்தது.

மற்றும் அரசாங்க காரியாலயச்களில் காவலாளராகக் கடமை யாற்றுவோரையும் இச்சங்கத்தில் அங்கம் வகிக்கச் செய்து அவர்களது நலனுக்காகவும் உழைப்பதென்றும் உணவுக் கட்டுப்பாட்டிலாகாக் காவற்காரர் கடந்த நான்கு மாதங்களில் அரசாங்க லீவு காலங்களில் கடமையாற்றியதற்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் அதிகப்படி சேவைச் சம்மளத்தைப் பெறுதற்கு ஆவன செய்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

சங்கத்தின் 4-வது ஆண்டு உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர். யோ. பாலச்ரந்திரன் - தலைவர், அல்பிரட் துரைசிங்கம் - காரியதரிசி, க. வேலாயுதபிள்ளை - தனாதிகாரி, பன்னிரண்டு பேர் கொண்ட அங்கத்தவர் உபகுழு ஒன்றும் தெரிவு செய்யப் பட்டது.

# செய்திச் சுருக்கம்

### கார்ப்பரேஷன் ஊழியர்கள்

அரசாங்க சேவையிலும், கூட்டுத் தாபனங்களிலும் கடமையாற்றுபவர்கள் 55 வயதுக்குப் பின்னர்தான் ஓய்வு பெற வேண்டுமென்றும் இவர்கள் 55வயதுவரை கட்டாயம் கடமையாற்ற வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

### ஜே. பி. நியமனம் மறுபரிசீலனை

யு. என். பி. அரசாங்கம் செய்த சமாதானநீதவான் நியமனங்களை மறுபரிசீலனை செய்வதென ஸ்ரீமாஅரசாங் முடிவுசெய்துள்ளது.

### இந்தியகுழு வந்துள்ளது

பதினெட்டுப் பேரைக் கொண்ட 'உலகப்பல்கலைக் கழகசேவையின் இந்திய ஓதசியக்' குழு இலங்கைவந்துள்ளது. இக்குழுவினர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல கலை நிகழ்ச்சிகளை

ஆசிரியருக்குக்கடிதங்கள்

## சிறுபான்மைத் தமிழர் மகிழ்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயரே அறியாவண்ணம் இந்துமதத் தலைவர்களும் அவர்களுடன் ஒத்துழைத்த நாவன்மை படைக்கவர்களும் சிறு

காட்டியதன்மூலம், இன்று கூட்டணி அமோகவெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது. அவர்கள் இன்னல்களை ஈடேற்றும்வகையில் திரு. எம். ஸி. சுப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் பொருமைப்பட முடியாது. வேலை வெண்டித்தரவும், இடமாற்றம் செய்யவும் பொதுமக்களில் பலரும் பார்லிமென்ட் மெம்பர்களின் உ வியையே நாடுகின்றனர். தேர்தலில் தங்களை ஆதரித்தவர்களையும் ஆதரிக்காதவர்களையும் கூட எம்.பி.மார்கள் தட்டிக் கழிக்க முடியாமல் இவ் விஷயங்களிலே பெரிதும் தங்கள்நேரத்தைக்கழிக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலே ஒரு வேலைக்கு எம்.பி, அவர்கள் ஒருவரை சிபார்சு செய்வதாக உறுதி கூறினராம். பின்னர் வேறு ஒருவர் அவரை நெருங்கி தமக்கே உதவி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவே அந்த எம்.பியின் பாடு தர்மசங்கடமாயிற்று. பின்னர் கொழும்பிலுள்ள ஒரு கூட்டுமுன்னணி எம்.பியிடம் இதற்காகப் பறந்துசென்றிருப்பதாகத் தெரிகிறது. முடிவில் எந்த எம். பியின் பேச்சுக்கு அதிக செல்லும் இப்படி தனிப்பட்டவர்களின் பணியில் எம்.பி.மார்கள் ஈடுபடுவதாயின் வேறு பொது விஷயங்களைக் கவனிக்க அவர்களுக்கு அவகாசம் இருக்குமா என்பது சந்தேகம். எம். பி மார்களின் இந்தச் சங்கடத்தை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை, எப்படி?

ஒரு வேலைக்கோ அல்லது இடமாற்றம் முதலியவற்றுக்கோ யாரும் எந்த எம்.பி யின் சிபார்சையும் பெற முயலுவது சட்டவிரோதமாகுமென்றும் எம். பியின் சிபார்சுடன் யாரும் வருவதாயின் அவர்கள் மனுக்கள் நிராகரிக்கப்படுமென்றும் அரசாங்கம் கண்டிப்பாக உத்தரவிடவேண்டும் அப்படிச் செய்வதால் எல்லாருக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம். பி. மார்களுக்கும் அது பெரிய கஷ்ட நிவாரணமாகவும் இருக்கும்.

## வர்த்தகக் கப்பல் கட்டணம்

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யும் சாமான்களுக்கும், இலங்கையில் இறக்குமதி செய்யும் சாமான்களுக்கும் கப்பல் கட்டணங்களை இரு பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் எட்டில் ஒரு பங்கு கூட்டுவதாக அறிவித்துள்ளன. அவ்விதம் செய்வதாயின் இலங்கையின் பொருளாதாரம் மேலும் மோசமாகி மக்களின் சங்கடங்கள் அதிகரிக்கக்கூடும். ஆகவே இலங்கையின் புதிய அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட அவ்விரு கப்பல் கம்பெனிகளின் பிரதிநிதிகளை அழைத்து இந்தத் தீர்மானத்தை ஒத்திப்போட வேண்டுமென்றும் இதைப்பற்றி யோசிக்க புதிய அரசாங்கத்துக்கு அவகாசம் வேண்டுமென்றும் கேட்டனர். இந்த வேண்டுகோளை பிரிட்டனிலுள்ள தங்கள் தலைமைப் பீடத்துக்குத் தெரிவிப்பதாக அப்பிரதிநிதிகள் கூறியுள்ளனர். இந்த நியாயமான யோசனைக்கு பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் செவிசாய்க்குமென்றே நம்புவோம்.

இலங்கையைப்போன்ற ஒரு தீவின் பொருளாதாரத்துக்குக் கப்பல்கள் இன்றியமையாதன. நமது விளைபொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் வெளிநாடுகளிலிருந்து உணவு முதலிய தேவைகளை இறக்குமதி செய்யவும் நமக்குச் சொந்தமான கப்பல் இல்லை. வெளிநாட்டுக் கப்பல்களையே நாம் நம்பி இருக்க வேண்டியுள்ளது. தங்கள் மனம் போனபடி அக்கம்பெனிகள் கட்டணங்களைக் கூட்டுவதாயின், என்ன செய்வது? இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று வேறு நாட்டுக் கப்பல்களைப் பாவிக்கலாம். அல்லது நமக்கே ஒரு வர்த்தகக் கப்பல் படையை அமைக்கலாம். நமது வேண்டுகோளுக்கு பிரிட்டிஷ் கம்பெனிகள் இப்போது செவிசாய்த்து, கட்டணங்களைக் கூட்டாமல்விட்டாலும்கூட இந்த தேசிய முக்கியம் வாய்ந்த பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைக்காண நமக்கான வர்த்தகப் படையைத் திரட்டுவதே சிறந்தது. கப்பல் தொழிலுக்காகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சின்நோக்கமும் இதுவே என்றும் இந்த நோக்கம் நிறைவேற புதிய அரசாங்கம் எல்லா முயற்சியுமெடுக்குமென்றுல் எதிர்பார்ப்பது மிகையல்ல.

### நன்கொடை

கோட்டை, வியா

மெபோன் நிறுவனத்தார் நாட்டைக் காக்கும் நிதிக்கு ரூபா 27, 000 வழங்கியுள்ளனர், பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் இதற்கான காசோலையை அவர்கள் கையளித்தனர். அப்போது தகவல், ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேராவும் பிரசன்னமாய் இருந்தார்.

ஆதியொடு அந்தமும் நடுவாகி நிலைநின்ற
அரனிடப் பாகவு[illegible]யே
புன்முறுவலாகிமக பூதகண தலைவனைநின்
பொற்கரம் தாங்கியருளி
பொருதியே வருசூரன் மார்பைப் பிடிக்கவேல்
புதல்வனுக்கீந்த தாயே
கன்மாதி கன்ம மெனு[illegible]மாயையில்
அலைந்துழலும்
கபடனுக்கருள் புரிகுவாய்
கருணைக்கோர் தலமுயர் நாகேஸ்வரப்பதியின்
கற்பகத் தருவுமாகிப்
பன்னலங்காட்டி வரு பொன்னின்மபலவரொடு
பாவியேன் பௌவ நீக்க
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர்
தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

— இசைமணி ஆ. மு. சுப்பிரமணியம்

(நயினை நாகேஸ்வரப்பதி ஸ்ரீ நாகபரமேஸ்வரியம்மை தோத்திரவிருத்தம் என்னும் நூலிலிருந்து)

## முந்நூறு ஆண்டுகளாக நடைபெறும் புராணபடனம்

**— சங்கீத பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி —**

ஈழநாட்டில் உள்ள பல கோவில்களில், கந்தபுராணம் படிக்கப்படுகிறது. இவற்றுள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கந்தபுராணம் பக்தியோடு படிக்கப்பட்டு வரும் பழைமைமிக்க ஆலயம் மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி விநாயகர் ஆலயமாகும். நாவலர் கந்தபுராண சபையார் யாழ்ப்பணத்தில் நடாத்திய கந்தபுராண நூற்காட்சியில் இவ்வாலயத்திலுள்ள முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கந்தபுராண ஏடும் வைக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது. அது சபையினர் எடுத்த நற்பணியை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

மாவடி விநாயகர் ஆலயத்தில் இவ்வாண்டுப்படிப்பு சித்திரையில் தொடங்கி ஆனி மாதம் பூர்த்தியடைகிறது,

இந்த ஆலயம் உற்பத்தியான விதமும் இங்கு நடந்த அற்புதங்களும்இறைஅன்பர்கள் அறியவேண்டியவிடையமாகும்.

"கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், சத்துருஜயம், இராசவசிகம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினுல் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம்: சத்தியம்; முக்காலுஞ்சத்தியம்'' என பண்டிதமணி தமது கந்தபுராணக்கலாசர நூலில் குறிப்பிடுகின்ருர்'

கடந்த சுமார் 60 வருடங்களில் 50 வருடம் வரை சுதேச வைத்தியர் நமசிவாயம் பொறுப்பேற்று புராணபடனத்தைநன்ருகநடாத்திவைத்தார் இக்காலத்தில் காலம் சென்ற முதுபெரும் புலவர் திரு. ஏகாம்பரம், புராணஉமையாளர் திருமுஆ. கணபதிப்பிள்ளை, திரு. வே. சின்னட்டியார். என்னும் பலர் படிப்புக்கு உதவியாக வந்தனர்.

அதன் பின் மீசாலை பக்தி நெறிககழகம் இப் பொறுப்பை ஏற்று நடத்திவருகின்றன. கழகக்காரியதரிசி திரு. கு. வி. மகாலிங்கம் மிகவும் சிரமத்திற்கிடையே எடுத்தகாரியத்தைத் திறம்பட நாடாத்தி வருவது பாராட்டுதற்குரியது.

கோவில் அதிகாரி திரு. வி. சபாரத்தினம், திரு. ஆ. கனபதிப்பிள்ளை, ஆசிரியர் ந. ஏரம்பமூர்த் திரு சுப்பிரமணியம் முதலானோர் இக்காரியத்திற்குப் பக்கப்பலமமேநின்று செயல்பட்டு வருகின்றனர்.

ஆண்டுதோறும் உமையாற்றும் கல்வயல் உரைவல்லுனர்கள் திருவாளர்கள் வ. சின்னையா, அப்பாக்குட்டி, வாரித்தம்பி, சு. ஆறுமுகம், தா. குருசாமி, சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பி ஆகியோரின்தொண்டு குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் மூன்று மாதங்கள் தொடர்ந்து நடைபெற்ற கந்தபுராண படிப்பையொட்டி இன்று கந்தவிரதப்படிப்பு நடைபெறுகிறது, இம்மாதம் 22-ம் திகதி வள்ளியம்மன் கல்யாணத்துடன் புராணப் படிப்பு நிறைவுபெறும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில்1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பக்தர்கள் யாராவது இருக்கிருர்களா? அதன் [illegible] காரணமாகத்தான் சு[illegible]விரட்ட முடியவில்லையா என்றுபுதிய அதிபர் திரு பெ. சபாரத்தினம் கவலை தெரிவித்தார்

இங்கு மாணவர்களினல் செய்யப்படும் [illegible]ட்டங்களையும் பயிர்களையும்அழித்துக் கொண்டிருக்கின்றன என்றும் இதை இங்கிருந்து விரட்டுவதற்கு இனி அரசாங்க உதவியைத்தான நாடவேண்டும் என்றும் அதிபர் கூறினுர்.

## புங்குடுதீவு முதலிடம்

புங்குடுதீவு, புதன்

ஊர்காவற்றுறை வட்டார ஆங்கில தினவிழா போட்டியில் புங்குடுதீவு மகா வித்தியாலயம் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது,

பரிசுபெறும் மாணவர்விபரம் வருமாறு;

க டுரை: 1-ம் இடம் செல்வன் க. சண்முகரத்தினம், 2-ம் இடம்: செல்வி ப வாசுகி, பா ஓதல்: 2-ம் இடம் செல்வி வி. நிர்மலா, உரத்து வாசித்தல்: 2-ம் இடம்: செல்வன் க: சண்முகரத்தினம்

காஷ்டிகானம்: முதலாம் இடம்,

### சகல ஊழியர்க்கும் ஒரே ரக உணவு

கோட்டை. புதன்

ஜூலை மாதம் 1-ம் திகதி தொடக்கம் கொழும்புத் துறைமுகத்தில் வேலைசெய்யும் சகலதர ஊழியர்களுக்கும் ஒரே ரக உணவு வழங்கப்படும்' என கப்பற்றுறை உல்லாசப் பயணத்துறை அமைச்சர் திரு பி. ஜி. கலுகல்ல அறிவித்துள்ளார்.

இவ்வளவு காலமும் உயர்தர ஊழியர்களுக்கு சாதாரண தொழிலாளருக்கும் உணவு வகையில் வித்தியாசம் காட்டுப்பட்டு வந்தது.

### இடமாற்றம்

மன்னர், செவ்

விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஜனப் எம். சி. எம். முஸ்தபா மன்னருக்கு மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மகிழ்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயரே அறியாவண்ணம் இந்துமதத் தலைவர்களும் அவர்களுடன் ஒத்துழைத்த நாவன்மை படைத்தவர்களும் சிறுபான்மைத் தமிழர்களை நசுக்கும் வகையில் சில சட்டங்களை இயற்றுவித்து ஒரு கோட்டையை எழுப்பியிருந்தனர். டொனமூர்த்திட்டமும் பின்னர் சோல்பரித் திட்டமும் இக்கோட்டையைத் தகர்த்துசிறுபான்மை மக்களுக்குச் சலுகைகள் வழங்கின. நாடும் விடுதலையடைந்தது.

முதல் அரசாங்க அமைப்பில் பெரியார் டி. எஸ். சேனநாயக்கா பிரதமரானதும் சிறுபான்மைத் தமிழரான முதலியார் இராஜேந்திராவை செனட்டராக நியமனம் செய்தார். அவர் இன்னும் சிலகாலம் வாழ்ந்திருநதால் இன்னும் சிலருக்குப்பதவிகள் அளித்திருப்பார் என நம்பலாம், அவரது மறைவுக்குப்பின் அவரது புதல்வரான திரு டட்லி சேனநாயக்காவும் திரு. ஜோன் கொத்தலாவலையும் சிறிது காலமேபதவி வகித்தார்களாதலால் சிறுபான்மைத் தமிழர்களுக்குப் பதவி விஷயத்தில் அவர்கள் மீது குறை சொல்ல நியாயமில்லை.

தற்போதைய பிரதமரான திருமதி ஸ்ரீமாவோவின் கணவர் திரு. எஸ் டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயகா பிரதமரானதும் தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன் திரு. ஜி. நல்லையாவை வாக்களிப்புமூலம் செனட்டராக்கினுர். யாழ்ப்பாண அரசாங்க அலுவலகங்களிலும கல்வி நிலையங்களிலும் இவர் காலத்தில் சிறுபான்மைத் தமிழருக்கு உத்தியோகங்கள் கிடைத்தன. திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தின் வேண்டுகோளை ஏற்று கல்வியமைச்சராக இருந்த டாக்டர் தகநாயகா சிறுபான்மைத் தமிழர் தொகுதிகளில் 21 பாடசாலைகளை அமைத்து சிறுபான்மைத் தமிழ் ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் நியமித்தார். திரு. பண்டாரநாயகா அநியாயமாய்க் கொலைசெய்யப்படாதிருந்திருந்தால் இன்று சிறுபான்மைத் தமிழர் என்ற சொல் மறைந்திருக்கும்.

கடந்த அரசாங்ககாலத்தில் யு என் பி. சிறுபான்மைத் தமிழருக்குத் துரோகம் செய்து விட்டது. அவர்களில் யாருக்கும் ஆட்சி மன்றத்திலோ செனட்டிலோ பதவிகள் கொடுககாமல் விட்டது ஆனல் அவர்கள் மீது இறைவன் கருணை காட்டியதன்மூலம், இன்று கூட்டணி அமோகவெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது. அவர்கள் இன்னல்களை ஈடேற்றும்வகையில் திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தைப் [illegible]திய அரசாங்கத்தின் பிரதமரான திருமதி ஸ்ரீமாவோ நியமன எம். பி. ஆக்கினுர். இச் செயலை சிறுபான்மைத் தமிழினமே மகிழ்ச்சியாரவாரத்துடன் போற்றுகின்றது.

உயர் சாதியினரில் சிறுபான்மையோர் மீது அன்பும் மரியாதையும் உள்ளவர்கள் இல்லாமலில்லை. காலஞ்சென்ற நீதியரசர் திரு.பி ஸ்ரீஸ்கந்தராசா. அப்போது யாழ் உதவி அரசாங்க அதிபராயிருந்த திரு டபிள்யூ பத்மநாதன் மற்றும் யாழ் கச்சேரியில் உயர் பதவி வகித்த திரு செ ஆதிரத்தினம் ஆகியோர் நல்லூர் கைலாயபிள்ளையார் கோவிலில் சிறுபான்மையோர் உட்சென்று வணங்க முன்னின்று உழைத்ததை நாம் மறந்துவிடமுடியாது. எம். ஸி, யின் நியமனம் இவர்களைப் போன்ற பெரியார்களுக்கும் மகிழ்ச்சிஅளித்திருக்குமென்பதில் ஐயமில்லை.

ஏ கே செல்லையா

யாழ்ப்பாணம்

0 0 0

### ஆயசசேவையும் தனியார்வளளமும்

காரைநகர் ஆயத்தில் பணம் அறவிடுபவர்கள் துரிதமாகச் செயல்படத் தவறுவதால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகுவதாக புகார் கூறப்படுகிறது.

காரைநகர்துறைமுகத்துக்கு பஸ்மூலம்வந்துசேரும் பிரயாணிகளிடம் ஆயப்பணம் அறவிடும்போது பாதை புறப்பட்டுச் சென்றுவிடுகிறது, பின்னர் அப்பாதை மீண்டும் திரும்பி வரும் வரைசுமார் 2மணித்தியாலத்துக்கு மேல்அங்கு தவம் கிடக்க வேண்டியிருக்கிறது.

தனியார் வள்ளக் காரருக்கு உழைப்புத்தேடிக் கொடுப்பதற்காகவோ அல்லது என்ன காரணத்திற்காகவோ இவ்விதம் நடைபெறுவதாகத் தெரியவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தனியார் வள்ளக்காரரும் ஒரு ரூபாய் அறவிட்டே வள்ளங்களை சேவையில் ஈடுபடுத்துகிருர்கள். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவார்களா?

க. வேலுப்பிள்ளை
காரைநகர்.

இந்தியகுழு வந்துள்ளது

பதினெட்டுப் பேரைக் கொண்ட 'உலகப்பல்கலைக் கழகசேவையின் இந்திய ஓதசியக்' குழு இலங்கைவந்துள்ளது. இக்குழுவினர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல கலை நிகழ்ச்சிகளை நடாத்துவர்.

### மிலாத் விழாவில் ஜனுப்ஹை

மாத்தளை, செவ்

'நபிகள் நாயகத்தின் போதனைகள் என்றும் மனித சமுதாயத்துக்குத் தேவைப்படுவதாலேயே அவரின் விழாக்களை நாம் இன்றும் கொண்டாடுகிருேம்' என மாத்தளையில் நடைபெற்ற மீலாத்விழாவில் தமிழகத்தைச்சேர்ந்த ஜனுப் எஸ். யு. அப்துல்ஹை கூறினுர்.

தமிழகத்திலிருந்து வந்துள்ள மற்றொரு பேச்சாளரான மௌலவி அப்துல் காதர் சாஹிப்பும் இவ்விழாவில் கலந்துரையாற்றினுர்.

## நியமனம்

கோட்டை, செவ்வாய்

தோட்டக் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் அந்தரங்கக் காரியதரிசியாக மொரவாக்கை கொரளை மேற்குப்பகுதி காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ரி. பி. திஸநாயகா நியமிக்கப்பட்டுள்ளார்.

## சிங்களத்தில் நடந்தது

குருநாகல், செவ்வாய்

இலங்கையில் முதல் தடவையாக குருநாகல் மாஜிஸ்திரேட்டான திரு. வில்சன் சுவர்ணபதி தமது நீதிமன்றத்தில் நீதிமன்ற அலுவல்கள் அனைத்தையும் சிங்களத்திலேயே நடத்தினுர்.

குருநாகல் வழக்கறிஞரான திரு. எச். எல். பிரேமதாசா தேசிய உடையில் வந்து வழக்கை விசாரிக்கத் தொடங்கினுர். ஏனையவழக்கறிஞர்களும் அவரைத் தொடர்ந்து சிங்களத்திலேயே வழக்குகளை விசாரித்தனர்.

### பெண் காரியாதிகாரி

புத்தளம், செவ்.

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பத்மினி அம்மாள் புத்தளம் கச்சேரி-தலைமைக் காரியாலயப் பிரிவுக் காரியாதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் பயிற்சி பெற்ற பின்னர் புத்தளத்தில் பதவி ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org